MALA
88. MADAVARAM HIGH ROAD.
Perambur, Madras-11.

தென்றல்

★★★★★★★ கிழமை இதழ் ★★★★★★★

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உள்பட) விலை 16 புதிய காசு ★ வெளிநாடு 20 காசு—அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

மலர் 7 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1992, மாசி 14 (25-2-'61) சனிக்கிழமை | இதழ் 36

சிரித்தேன்; அழவில்லை!

"கடமை, கண்ணியம், கட்டுப்பாடு" என்ற வார்த்தைகளைத் தலைவலி வருமளவுக்கு நான் கேட்டிருக்கிறேன்.

ஆனால் அவற்றிற்கு ஒரு வடிவம் உண்டு என்பது எனக்குத் தெரியாது.

அந்த வடிவத்தை திருச்சியில் நான் கண்டேன்.

அந்த மூன்று வார்த்தைகளும், "ஒரு செருப்பின் மூன்று குறுக்குத் தோல்கள்" என்பதைப் புரிந்துகொண்டேன்.

நாம் பரம்பரையாக வளர்த்து வரும் நாகரிகம் அற்புதமாக அங்கே பளிச்சிட்டது.

செருப்பாயுதம் தாங்கிவந்த அந்தச் சீராளனை, 'வெறிய'னென்று தங்கள் அறிக்கையில் குறிப்பிட்டார்கள் சிலர்.

தவறு - அவன் மிகவும் நல்லவன்.

காந்திக்கும், பெரியாருக்கும் கிடைத்த ஒன்றை - கண்ணதாசனுக்கும் தரவேண்டுமென்று எப்போது அவன் சொல்லி அனுப்பப்பட்டானோ—

அப்போதே அந்த உத்தமன் என்னையும் பெரிய வரிசையில் சேர்த்துவிட்டான்.

"செருப்படியைத் தாங்கினோம்-கல்லடியைத் தாங்கினோம்" என்று மேடையிலே பலபேர் பேசியிருக்கிறார்கள்.

அதெல்லாம் வெறும் மேடை நாடகம்.

இந்தப் பரிசுக்கு அவர்கள் எப்போதுமே உரியவர்களாக இருந்ததில்லை.

உயர்ந்த உள்ளம் கொண்டவர்கள் மட்டுமே அதைப் பெற முடியும்.

மேடைகளில் மூன்றாந்தர மனிதர்களுக்குக்கூட, கைத்தறித்துண்டுகளும் மாலைகளும் கிடைக்கும்.

ஆனால்—

சுயமாகச் சிந்திக்கிறவனுக்குத்தான் செருப்புக் கிடைக்கும். அந்த வாலிபன் வாழ்க!

'அங்குச'த்தால் அழைத்துச் செல்லப்படும் அந்த யானை வாழ்க!

'மணி'யான பரிசு தந்த அந்த மறவன் வாழ்க!

அந்தக் 'கருணை'க்கடல் வாழ்க!

அந்த 'புரட்சி வீரன்' வாழ்க!

அந்த 'இலட்சிய' ஏந்தல் வாழ்க!

'தர்மத்'தை உலகுக்குச் சொன்ன அந்தத் தகையவன் வாழ்க!

அடித்த நேரத்திலும் நான் அவனைக் கோபிக்கவில்லை.

இன்னும் எள்ளளவும் அவன் மீது கோபமில்லை!

சோழநாட்டு உணவு விடுதிகளில், அவன் நம் கலைஞர்களுக்கு எவ்வளவோ வழங்கியிருக்கிறான்.

இன்றுதான் புகழ் தரக்கூடிய ஒன்றை எனக்கு வழங்கினான்.

ஒவ்வொரு மனிதனின் பெயரையும் உலகம் அறிவதற்கு ஒவ்வொரு சம்பவம்தேவையென்பது இயற்கை விதி.

அடியேனுக்கு இது நான்காவது சம்பவம்.

முதல் மூன்று சம்பவங்களை அறியாமல் வழங்கிவிட்டவர்கள் எதிரிகள்.

நான்காவது சம்பவத்தை அறிந்து வழங்கியவன், என் நண்பர்களின் நண்பன்.

இன்னும் பல சம்பவங்களை இப்படியே நான் எதிர் பார்க்கிறேன்.

அரசியலில் அடிபட்டவனுக்குத்தான் "மார்க்கட்" என்பது அசைக்க முடியாத வரலாறு.

தாக்கப்பட்டவன் பெயர், காக்கப் படுமென்பது தங்கத்தால் பொறிக்கப்பட்ட வாக்கியம்.

ஆனால் ஒரு வருத்தம்.

அவனை அனுப்பிய நண்பர்கள் தாங்களே வந்திருக்கலாம்.

நற்குடிப் பிறந்தோர்-நல்வழி அறிந்தோர் அப்படித்தான் செய்வார்கள்.

இந்த வகையில் **சீசரின்** நண்பன் அவர்கள் கவனத்திற்குரியவன்.

அவனேதான் **சீசரைக்** கொன்றான்.

வேறொருவன்பணிபுரிய வேறு சிலர் களிப்படையாமல், தாங்களே செய்து தாங்களே மகிழ்ந்திருக்கலாம்.

இரவுமணி பனிரெண்டுக்குத் தொலைபேசி மூலம் செய்தியறிந்து துள்ளி மகிழ்ந்தவர்கள்-

தாங்களே வந்து தங்கள் பெயருக்கு விலை பேசியிருக்கலாம்.

அவர்கள் பாவம், நல்லவர்கள்!

இறங்குமுகத்திலிருக்கும் தங்கள் வாழ்க்கையையும் தொழிலையும் எண்ணி அமைதியடைந்துவிட்டார்கள்.

கருவாட்டை மடியில் கட்டிக்கொண்டு, அது ஊருக்குத் தெரியாதென்று நடந்து சென்றவன் கதைபோல்-

அவர்களும் நடந்து செல்கிறார்கள்.

கருவாடு தெரியவில்லை;

வாசனை வருகிறது.

"எப்படித் தீர்க்க நினைக்கின்றீர்களோ-அப்படியே தீர்க்கப்படுவீர்க"ளென்பது விதி.

அந்த விதி, அவ்வப்பொழுதே புரிந்துவிடாது......

அவர்களும் நானும் ஒரே வீட்டில் குடியிருக்கிறோம்.

உலகத்தின் காட்சி சாலையில் நான் என்னையே வைத்திருக்கிறேன்.

அவர்கள் தங்கள் ஆட்களை வைத்திருக்கிறார்கள்.

(7-ம் பக்கம் பார்க்க)

நண்பர்களே!

தோழர்களே!

இனி நான் கலந்துகொள்ளும் கூட்டங்களில் மாலை, துண்டுகளுக்குப் பதில், ஆளுக்கு ஒரு சோடி செருப்பு வாங்கிக் கொடுங்கள்.

முடிந்தவர்கள் கொடுங்கள்.

புதியதாக இருந்தால் நலம்.

அன்பன்,

கண்ணதாசன்

சென்னை முதல் அமைச்சர்

மகா-ராஜ-ராஜ-ஸ்திரி காமராசர் அவர்களுக்கு

வெள்ளிடை முடங்கல்

விருதை சங்கரலிங்க சங்காரரே! வணக்கம். என்னடா இவன் 'விருதை சங்கரலிங்கசங்காரரே' என்று புதுமையாக விளிக்கிருனே என்று திகைக்கிறீர்களா? திகைக்க வேண்டாம். கொஞ்சம் சிந்தனை செய்தால் விளங்கும்!

ஆனால், பாவம்; நீங்கள் இந்த வழிகளில் சிந்தனைசெய்து பழக்கமில்லாதவர்! சரி; நானே விளக்கம் சொல்லிவிடுகிறேன்.

இந்துமதக் கடவுளர்களான சிவன், முருகன் திருமால் முதலியவர்களைப் பக்தர்கள் துதிக்கும்போது, அந்தந்தக் கடவுளர்களின் மெய்க்கீர்த்திகளை பாடல்களாக அமைத்துத் துதிப்பதைக் கேட்டிருக்கிறீர்களா? உங்களுக்கு இதையெல்லாம் கேட்க நேரமேது-வாய்ப்பேது?

இளம்வயதில் சத்தியமூர்த்தி ஐயர் போன்ற தலைவர்களின் பெட்டி படுக்கை தூக்கும் திருத்தொண்டு புரிந்தீர்கள். வயதேற-வயதேற காங்கிரசின் பெருந்தொண்டு...இப்படியே காலத்தைக் கடத்திவரும் நீங்கள், இதையெல்லாம் தெரிந்திருக்க முடியுமா? முடியாது! நானே சொல்லிவிடுகிறேன்!

"முப்புரம் எரித்த முதல்வா போற்றி"
"காலனை உதைத்த காலா போற்றி"
"மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியைச் சிறையெடுக்க வந்தமுகம் ஒன்றே"
"..........முதுகூளித்திரள்
டிண்டிண்டெனக் கொட்டி ஆட
வெஞ்சூர்க் கொன்ற ராவுத்தனே"
"கூடாரை வெல்லும் சீர்க் கோவிந்தா!"
"வல்லானைக் கொன்ருனை மாற்ருரை மாற்றழிக்க
வல்லானை மாயனைப் பாடேலோர் எம்பாவாய்"

இவைகள் முறையே கடவுளர்களின் தீவைத்தல், முறைதவறி நடத்தல், கற்பழித்தல், கொலை செய்தல் ஆகிய வல்லமைகளைப் புகழ்ந்து கூறும் துதிப்பாடல்கள்.

இதுபோலவே தங்களின் மெய்க்கீர்த்திகளும் பாடல்களாக இயற்றப்பட்டு நாட்டுமக்கள் நாவில் நடம்புரிய வேண்டாமா?

"செந்தமிழர் தீவினைபோல் தீய வடநாட்டார்
முந்தைத் தவம்போல் முளைத்தானை மாவிருதைச்
சந்தியில் செத்தொழிந்த சங்கர லிங்கருக்காச்
சிந்தை இரங்காத் திருத்தானை ஈ. வே. ரா
பந்தமாப் பாராட்டும் பச்சைத் தமிழனைத்
தந்தையர் நாட்டைத் தமிழ்ப்பெயரால் சொல்லாத
விந்தை மனிதனை வீடணன் நாணமுற
மந்த மதியால் வடவருக்குக் கால்பிடிக்கும்
நொந்த தமிழ்க்குடியின் நோயானைத் தீந்தமிழைக்
கொந்திக் குலைக்கவந்த கோடாரியைக் கல்லாமல்
மந்திரி யாகி வளநாடு தேயவிட்ட
தந்திரியைக் காணல் தவறு."

இப்படி மாபெரும் காவியமே இயற்றலாம் உங்களைப் பற்றி. எனக்கு நேரமில்லை. எனவே தங்களை-தங்களின் சீரிய (!) கொள்கைகளை எதிர்த்து செத்துத் தொலைந்தாரே சங்கரலிங்கனர் - அது தங்களின் வெற்றிகளிலெல்லாம் சிறந்த மாபெரும் வெற்றியல்லவா? அதனைத் தங்களின் மெய்க்கீர்த்திகளில் தலையானதாகக் கருதுகிறேன் நான். அதனால்தான் தங்களை விளிக்கும்போது; விருதை சங்கலிங்க சங்காரரே! என்று மட்டும் விளித்துச் சிறப்பித்திருக்கிறேன். இப்போது புரிகிறதா? நிற்க.

சென்னைக்குத் தமிழ்நாடு என்று பேர்சூட்டக் கோரி ம. பொ. சி கூட்டம் என்னமோ ஒரு போராட்டம் நடத்துகிறதாமே, அதைப் பற்றித் தங்களின் அந்தரங்கக் கருத்து என்ன? இதை ஏன் இவ்வளவு வளரவிட்டீர்கள்?

காங்கிரசுக்காரர்களிலேயே சில துரோகிகள் - உங்களின் அந்தரங்கப் பகைவர்கள்-உங்களைத் தலைகுனிய வைக்கவேண்டும் என்று நெஞ்சிலே நஞ்சை வைத்திருப்பவர்கள் - ம. பொ. சிக்கு மறைமுகமாக ஆதரவு காட்டி வருகிருர்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா?

நிதிமந்திரி சுப்பிரமணியமே இத்தகைய துரோகிகளின் முதல்வராக இருக்கும்போது, மற்றவரைச் சொல்ல என்ன இருக்கிறது?

பிரிட்டிஷ் இராணியார் போன ஞாயிற்றுக்கிழமை சென்னைக்கு வந்தனர். வந்தாலென்ன? அதை ஒரு காரணமாக வைத்துக்கொண்டு, ம. பொ. சியின் போராட்டத்தை நிறுத்தவேண்டும் என்று கேட்டு ம. பொ. சிக்கு மாபெரும் மரியாதை செய்து உங்களை அவமானம் செய்கிருரே நிதிமந்திரி-எவ்வளவு சூழ்ச்சி?

போலீஸ் அதிகாரி திரு. குழந்தைவேலு "பிரிட்டிஷ் அரசி வரும்போது பொதுமக்கள் வரிசையாக கட்டுப்பாடு குலையாமல் நின்று **சபாஷ் தமிழ்நாட்டு மக்கள்** என்று. அரசி பாராட்டும்படி நடந்துகொள்ள வேண்டும்" என்பதாக விடுத்த அவருடைய வேண்டுகோள் ஒன்றில் கூறி இருக்கிருர். இது மறைமுகமாக தமிழ்நாடு என்கிற உணர்ச்சியைத் தூண்டுவதும் உங்களைக் கேலி செய்வதும் ஆகாதா?

பிரிட்டிஷ் இராணி வரும்போது ம. பொ. சி கூட்டத்தையெல்லாம் பிடித்து சிறையில் அடைத்துவிட்டால் போகிறது; இதற்காக சாட்சாத் உங்கள் சர்க்கார் ம. பொ. சி காலில் விழுவதா? விருதை சங்கரலிங்கத்தின் சாம்பல்கூட சிரிக்கிறதே!

இது எப்படியோ போகட்டும். எட்டயபுரத்தில் நடந்த கூட்டத்தில் தமிழ்நாடே பழைய இலக்கியத்தில் கிடையாது என்று பழம் பேரிலக்கியங்களை எல்லாம் ஆராய்ந்து கரைகண்ட பேரறிவால் ஆணித்தரமாகச் சொன்ன நீங்கள், பாரதியார்தான் "முதன் முதலில் தமிழ்நாடு என்று சொன்னவர்" என்று ஏன் உளறிக் கொட்டினீர்கள்?

நீங்கள் இப்படி உளறியதை ஆதாரமாக வைத்துக்கொண்டு சென்னை ராஜ்யத்தில் கிடக்கிற தமிழ்ப்புலவர் அத்தனைபேரும் சிலப்பதிகாரம், பரிபாடல், பதிற்றுப்பத்து, பெரியபுராணம் ஆகிய ஏடுகளைத் தூக்கிக்கொண்டு உங்களைத் தேடித் திரிகிருர்கள்-பத்திரிகை எல்லாம் தமிழ்நாடு தமிழ்நாடு என்று எதையோ காணுததைக் கண்டவர்போல எழுதுகிருர்கள். கடைசியில், உங்களுக்கு இலக்கிய அறிவே கிடையாது-படிக்காதவர் என்றெல்லாம் தீர்ப்பு எழுதுகிருர்கள்-நீங்களோ எட்டயபுரப் பேச்சுக்கு பிறகு ஒரு வார்த்தையும் பேசாமல் ஒடுங்கிக் கிடக்கிறீர்கள்! ஏன்?

எதற்காக நீங்கள் இப்படி அடங்கி ஒடுங்கவேண்டும்? படித்தவர்தான் எதையும் பேசவேண்டுமா?

இந்த நாட்டில் வறுமை இருக்கிற மட்டும் வாங்கின பணத்திற்குத் துரோகம் செய்யாமல் வாக்களிக்கிற மூடநம்பிக்கை இருக்கிற மட்டும் நீங்கள்தான் மந்திரி - நீங்கள்தான் இராஜா - நீங்கள் சொன்னதுதான் இலக்கியம்-இலக்கணம் எல்லாம்! எதற்காக வாயை மூடிக்கொண்டு ஒதுங்குகிறீர்கள்? நன்ருகக் கேளுங்களேன்:

"சேரநாடு, பாண்டியநாடு, சோழநாடு, தொண்டைநாடு, வேளிர்நாடு இப்படிப் போனபிறகு 'தமிழ்நாடு' என்று, இலக்கியத்தில் இருக்கவேமுடியாது. அப்படி ஏதாவது இருந்தால் அது இடைச் செருகலாய்த்தான் இருக்கும்."

இப்படி ஒரு போடு போடுங்களேன்! எவன் கேட்கமுடியும்? இன்னொரு வழியாகவும் கேட்கலாம்:

தமிழ் என்ருல் இனிமை என்று பொருள். நாடு என்ருல் விரும்பு என்று பொருள். ஆகவே, தமிழ்நாடு என்ருல் இனிமையை விரும்பு என்று பொருளாகிறது.

சிலப்பதிகாரத்திலிருந்து பாரதியார் பாடல்வரை தமிழ்நாடு என்று வருமிடமெல்லாம் இனிமையை விரும்பு என்றுதான் பொருள்கொள்ள வேண்டுமே தவிர தேசம் என்று பொருள் சொல்லக்கூடாது.

"செந்தமிழ் நாடென்னும் போதினிலே
இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே"

என்று பாரதி ஏன் சொன்னர்? இனிப்பை விரும்பு என்று சொன்னல்தான் கேட்கவே இனிப்பாக இருக்கும்; இதைத்தான் அப்படிக் கூறினரே தவிர வேறில்லை. உண்மைப் பொருள் காண முடியாத அரைகுறைகள் தமிழ்நாடு பழைய இலக்கியத்தில் இருப்பதாகக் கத்துகின்றன.

இப்படித் தைரியமாகச் சொல்லுங்களேன்! சொன்னலென்ன?

"அரிசிப் பஞ்சத்தை தீர்க்கவே முடியாது" என்று, புள்ளி விவரத்தோடு அறிவித்து—கருத்தடைத் திட்டம் வந்து—அதனு

[11-ம் பக்கம் பார்க்க]

''போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!''

எண்ணம்

மலர் 7 | 25-2-'61 | இதழ் 36



மாபெரும் தவம்

பண்பாடு வாய்ந்த செல்வப் பெருங்குடியில் தலைமகனாய்த் தோன்றி—

அன்னையின் அன்பிலே - அத்தையின் பரிவிலே - சிற்றன்னை சீராட்டிலே - நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து—

அறிவறிந்த-பழிபிறங்காப் பண்பும், வழி வழி வந்த மறமும், நெறிபிறழா-அறந்திறம்பா-சொன்மாறாச் சான்றாண்மையும் பொருந்தியவர் சம்பத்.

ஆர்த்த சபைக்கோர் அணிகலனாய் - வார்த்தையால் கோடிக்கொருவனாய்-பாகொத்த இன்சொல்லால்-சோகாப்புச் சொல்லிழுக்குமின்றி-மாற்றார் நெஞ்சத்தில் வயிர முளையடிக்கும் வாய்வல்லான் தோழர் சம்பத்.

அரிதில் முயன்று-அரசியலாரின் ஐந்தாண்டுத் திட்டங்களின் வஞ்சகத்தை-தென்னாட்டைத் தேய்ப்பதற்குச் செய்துவரும் சதிச்செயலைக் கண்டறிந்து - பத்தாண்டுகளுக்கு முன்னரே கழக மேடைகளில் பறையறைந்த முதற்பறையன் தோழர் சம்பத்.

அத்தகைய பேராளன்-சீராளன் ''கழகத்தின் மாசு துடைக்காமல்-புனிதப் படுத்தாமல் உணவருந்தமாட்டேன்'' என்று வெஞ்சூள் உரைத்து அமர்ந்திருக்கிறார்.

பட்டினிகிடந்து பழகாதவர்-அவர் வீட்டு நாய்களுக்குங்கூட அது பழக்கமில்லாத ஒன்று. அத்தகைய வளமார் குடியில் பிறந்தவர் கழகத்தின் ''மாசு துடைக்கவேண்டும் அல்லது சாவு கிடைக்க வேண்டும்'' என்று அமர்ந்திருக்கிறார்.

செல்வவளம் பெற்றவர்கள் பலர் உண்டு. எல்லாச் செல்வமும் வாய்க்கப் பெற்றவர் மிகச் சிலரே. செல்வமிருக்கும் கல்வி இராது. செல்வமும் கல்வியும் இருக்கும் மனதுக்குகந்த மனைவி இராது. செல்வமும் கல்வியும் நல்ல மனைவியும் வாய்த்திருக்கும், நோயற்ற நல்லுடம்பு வாய்த்திராது. இவையத்தனையும் பெற்றிருப்பார், நல்ல உடன்பிறப்பு இராது-நாடறிந்த புகழ் இராது. இப்படியே ஒன்றிருந்தால் வேறொன்றிராத செல்வவான்கள் மிகப்பலர். தோழர் சம்பத்திற்கு எந்தச் செல்வத்திலும் குறையில்லை. ஆண்டுகளால் மிக இளையர்-அறிவால் பழம் பெருமுதியர்.

''அவருடைய சொல்லாடலால் வந்த பொல்லாங்குஇது'' என்று, சுட்டிக் காட்ட அணுவளவு கறையும் இல்லாதவர் ஒருவர் யார் என்றால், தோழர் சம்பத் என்பதே நமது முடிவு. இது ஒன்றே, அவரது பெருமைக்கும் சால்புக்கும் போதுமானது. அவர் பேச்சினால் முசுலீம்கள் புண்பட்டுவிட்டனர். இவர் பேச்சினால் கிறித்தவர்கள் கிளர்ந்தெழுந்தனர். அந்தப் பேச்சு இழுக்குத் தருவது இந்தப் பேச்சு கேலிக் குறியது. என்பனபோன்ற வரலாறு பெறாதவர் சம்பத்.

அறையிலே ஒன்று; அம்பலத்தில் வேறொன்று; உள்ளத்தில் ஒன்று; உதட்டில் மற்றொன்று; பெரியவர்க்கு ஒன்று; பேதையர்க்குப் பிறிதொன்று; என்ற பேதமின்றி, அப்பனுயிருந்தாலும் - ஆண்டவனுயிருந்தாலும் - அம்பலமாயிருந்தாலும்-அறைநடுவாயிருந்தாலும்-உள்ளத்தில் உதிப்பதைக் கள்ளமின்றி, கண்ணியம் குன்றாமல், கடமை மறவாமல், கட்டுப்பாடாகக் கூறும் நம்கால நக்கீரன்-திருவள்ளுவன் தோழர் சம்பத்.

அத்தகைய அறம்பழுத்த மறக்குணமைந்தனுக்கு உண்ணாநோன்பு ஏற்க வந்த காரணந்தான் என்ன?

''சும்மா மிரட்டுகிறான் பைத்தியக்காரன்! தமிழ்நாடு வேண்டும்! என்று உண்ணாநோன்பு மேற்கொண்டாலாவது உலகம் போற்றும்! இதைக் கண்டு யாரும் மிரளப்போவதில்லை!'' என்றாராம் பேராசிரியர் ஒருவர்.

இத்தகைய பேராசிரியர்களின் சிந்தனைக்காகச் சிலவற்றை நினைவுபடுத்துவோம்.

கழகத்தின் கடந்தகாலப் போராட்டங்கள் - நடைமுறைகள் முதலியவை பெருமைப்படத்தக்க அளவிலிருந்தாலுங்கூட அது செய்யத் தவறிவிட்ட காரியங்கள் ஏராளம் இருக்கின்றன.

கழகம் ஒரு தேசிய விடுதலை இயக்கம் என்பது கடந்த சில ஆண்டுகளாக கணிசமான அளவு மறக்கடிக்கப்பட்டு வந்திருக்கிறது. சுதந்திர நாடுகளில் இயங்கிவரும் பல்வேறு கட்சிகளில் ஒன்றைப்போலவே தி. மு. கவின் பேச்சும் எழுத்தும் கொஞ்சநாளாக மாறி வந்திருக்கிறது. கட்சியின் பெருந்தலைவர்கள் நீண்ட நெடுங்காலத் தொண்டர்கள்-சிறைசென்றவர்கள்-உயிர்நீத்த தியாகிகள், ஆகியோருக்கில்லாத பெருமையும் விளம்பரமும் நடிகர்களுக்கு மட்டும் ஏற்பட்டு வருகிறது. கழகப் பத்திரிகைகளும் தலைவர்களும் கழக நடிகர்களின் சின்னஞ் சிறிய செயல்களையும் பெரிதாக விளம்பரம் செய்து பெருமைப்படுத்துவதைக் காண்கிறோம்.

இதனால் கழகத்தின் அரசியல் கொள்கைகளைவிட கலையரங்க வேட்கையே வளர்ந்திருக்கிறது.

இத்தகைய நிலைமைகளைப் போக்கியாக வேண்டும் என்ற கருத்தில்தான், குமாரபாளையம் பொதுக்குழுவிற்கு முன்னால், பொதுக்குழு உறுப்பினர் அனைவர்க்கும் 26-2-1960-ம் நாளிட்ட மடங்கல் ஒன்றை அனுப்பினார், தோழர் சம்பத்.

அந்தக் கடிதத்தில் தோழர் சம்பத் அவர்கள் வற்புறுத்தியதெல்லாம் ஜனநாயகம் சரியானபடி நடைமுறையில் இருக்கவேண்டும் - பெயரளவில் இருக்கக்கூடாது என்பதே. இது கசப்பான உண்மை!

பின்னர் கழகத்தேர்தல் வந்தபோது அண்ணா பொதுச்செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதன் பிறகும் ஜனநாயகம் உயிரூட்டத்துடன் இயங்குவதாகத் தோன்றவில்லை. அதன் தொடர்பில் 'எல்லாரும் இந்நாட்டு மன்னர்'' கட்டுரை, திராவிட நாட்டில் வெளிவந்தது. அத்தகைய கட்டுரைகள் அண்ணாவின் வாயிலாக வரக்கூடாது என்று சுட்டிக்காட்டவே ''அண்ணாவின் மன்னன்' கட்டுரையை சம்பத் எழுதினார். இந்தக் கட்டுரைகளின் விளைவே சம்பத்தின் அவைத்தலைவர் பதவி விலகல்.

வேலூர் விளைவுகளுக்குப் பிறகு பொதுக்கூட்டங்களில் பேசப்பட்ட பேச்சுக்களில் பத்திரிகைஎழுத்துக்களில் இறைச்சிப் பொருளும் உள்ளுறை உவமங்களும் கலவாத பேச்சு எழுத்து இல்லை என்றே சொல்லலாம்.

இந்த நிலைமை விபரீதத்தை எட்டுவதற்கு முன்னால், அண்ணா அவர்களும் சம்பத்தும் மனவேற்றுமைகளை விட்டொழித்துக் கூட்டறிக்கை விட்டனர்-பயன்?

அந்தக் கூட்டுறவை விரும்பாதது மட்டுமல்ல-வெறுக்கிறோம்-எதிர்க்கிறோம் என்பதுபோல் சிலர் பேசவும் எழுதவும் தலைப்பட்டனர். அதன் பயன்தான் திருச்சி சம்பவம்- உண்ணாவிரதம்.

திருச்சி சம்பவம் தூத்துக்குடியையும் சாமியையும் நினைவூட்டுகிறது,

தூத்துக்குடி சந்துமுனையில்-இரவில் மரத்தடி இருட்டில்-போகிற போக்கில் நடந்தது

திருச்சி-வெளிப்படையாக பல்லாயிரக்கணக்கான மக்கள் அமர்ந்திருக்கையில் நடந்திருக்கிறது. இதுதான் வித்தியாசம்!

இத்தனைக்குப் பிறகும் கேலி செய்கிறார்கள் என்றால், நாம் என்ன செய்ய முடியும்?

ஒன்றுமட்டும் அறத்தின் பாற்படுத்திக் கூறுவோம். உண்ணாநோன்பைக் கேலிக்குரியதாகக் கருதி கெடுமதி வளர்க்க வேண்டாம்! பழங்கால முடிமன்னர்கள் மானத்தைக் காப்பாற்ற வடக்கிருந்த செய்தி உலகறியும். நம் காலத்தில் உண்ணாநோன்பினால் உயிர்துறந்த ஸ்ரீராமுலு இந்திய அரசாங்கத்திற்கு இருதயம் உண்டாக்கித் தந்தார்.

சம்பத்தின் உள்ளம் உறுதியானது. உடல் மென்மையானது.-பட்டினிக் கிடந்து பழக்கமில்லாதது. ''கொண்ட கொள்கைக்காக நம்மை நாமே அர்ப்பணித்துவிட வேண்டும்'' என்று கூறிவரும் மறவர் அவர்.

விரும்பத்தகாத விளைவுகள் நேரிட்டால் அதன் பலனை எல்லாரும் அனுபவிக்கவேண்டும்-தப்பமுடியாது. உண்ணாநோன்பு 'மாபெரும் தவம்!'

''ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணின் தவத்தான் வரும்''

—குறள்.

கல்லூரிக் கவியரங்கம்

கண்ணதாசன் அவர்களின் அன்னை விசாலாட்சி ஆச்சியின் நினைவாக காரைக்குடி அழகப்பா தமிழ்மன்றம் நடத்திய அனைத்துக் கல்லூரிப் போட்டியில் மூன்றாவது பரிசு பெற்ற கவிதை.

அன்னையின் துயர்

க. இராமையன். பி.ஏ.,
அழகப்பா கல்லூரி, காரைக்குடி.

அன்றொருநாள் கல்லூரி வெளியின் கண்ணே
அருந்தமிழ மாணவர்தம் அணிகள் முன்னர்
நின்றொருவர் நேரில்லா இந்திச் சொல்லால்
நில்லென்றும் திரும்பென்று மாணை யிட்டார்
மன்றொருவர் நின்றுதமிழ் மறவ ருக்கு
மறுவிலுயர் தாய்மொழியில் பயிற்சி தந்து
சென்றுபல தேயத்தை வென்றி கொண்ட
சீர்மைதனை நினைந்தெனது விடுதி சேர்ந்தேன்.

அன்றிரவு நானறையில் துயிலுங் காலை
அருந்தமிழா மன்னையவள் கனவில் தோன்றித்
தன்றுயரை வரலாறாய்த் தந்தாள் நானும்
தக்கவா றவளுரையைத் தருவேன் கேளீர்.
"இன்றுபல வறிவியலி லேற்றம் பெற்ற
எழில்மேலை நாட்டாரன் றிருளி லுற்று
மன்றேறும் மொழியின்றி மாழ்கு ஞான்று
மகனேநான் மாட்சியுற்ற செய்தி கேளாய்!

முடிசார்ந்து முரசறைந்து முதற்சங் கத்தில்
முந்தியதொல் காப்பியத்தை யரங்கில் தந்து
வடிம்பலம்ப நின்றிட்ட குமரி நாடும்
வகையாக இடைச்சங்கம் வளர்ந்து வந்த
கடிதறுநற் கபாடபுர மென்னும் ஊரும்
கடலுண்டு களியேப்ப மிட்ட பின்றை
மடிமையிலு மெனைவளர்க்கும் புலவ ரோடு
மறவேந்தன் திருமாறன் மதுரை வந்தான்.

வந்தமுடத் திருமாறன் மூன்றாஞ் சங்கம்
வயங்கெழுநல் மதுரையிலே நிறுவி நாளும்
முந்துகொடுங் கடல்கோளால் நொந்தே னுக்கு
முடிசூடி யரசோச்சும் முறைமை செய்தான்
நந்தமிழப் புலவரெனை நச்சி யீண்டு
நங்கையென் முடிமுதலா யடிகள் ஈறாய்ச்
செந்தமிழ்த்தேன் நற்குறளும் சிலம்பும் மற்றும்
செம்மையா மிலக்கியத்தா லணிகள் செய்தார்.

இருந்தமிழர் மாண்பினையே யிகழ்ந்த தாலே
இழிகனக விசயரெனும் வடக்கு வேந்தர்
கருங்குஞ்சிச் சிதைந்திடவே கல்லை யேற்றிக்
கற்பிக்குச் சிலையெடுத்த சேரர் கோமான்
அருந்தம்பி சிலம்பினையே யழகா யாத்தான்
ஆன்றபெருங் கற்பிகளின் சீர்த்தி சொன்னான்
பெருந்திறல்சேர் மூவேந்தர் புகழ்மை பாடிப்
பெற்றஎன்? புதல்வரினும் பொலிவு பூண்டான்.

வடமன்னர் பலர்நூறி வாகை சூடி
வடவரையின் தலைமீதும் புலிபொ றித்தே
யிடமகன்ற காவிரிக்குக் கரைகள் போட
ஈழவர்பல் லாயிரவ ரிவண்கொ ணர்ந்தே
தடமகன்ற தோள்திருமா வளவன் ஆண்ட
தஞ்சமருள் புகார்நகரின் பெற்றி ஓர்ந்து
படத்திலுறு மோவியமாய்க் கடிய லூரன்
பாடிப்பல் லாயிரம்பொன் பரிசில் பெற்றான்.

கிண்கிணிகள் களைந்திட்ட செழியன் தன்னைக்
கீழறுத்து வென்றிடலா மென்றே வந்த
மண்டிணிந்த ஞாலத்தார் மறங்கெ டுத்து
மாண்புற்ற தலையாலங் கானம் வென்றே
யெண்டிசையு மிசைகொண்டு செழிய னுண்ட
எழில்மேலை நாட்டுடனே வணிகஞ் செய்து
மண்டிசைநல் மதுரையது காஞ்சி யாத்த
மருதனுமென் மைந்தருளும் மாண்பு பெற்றான்.

இன்னணமே பன்னூறு யாண்டு நானும்
இனிமையாய் அரசோச்சி யிலங்குங் காலை
ஒன்னலர்தம் நுழைவாலே யானு முற்ற
ஒருசிலவா மிடுக்கண்க ளுரைப்பேன் கேளாய்
பன்னருதீப் பஞ்சத்தின் பசிவாய்ப் பட்டுப்
பல்குழுவா யாரியரும் பிழைப்பு நாடி
நன்னர்நந் தமிழகத்துப் புகுந்த ஞான்று
நற்றமிழ ரன்னவரின் நலத்தை வேட்டார்.

எந்நிலையும் சிறவாத மொழியைப் பேசி
இவணுற்ற வடமொழியா ரென்னை வீட்டித்
தந்நலத்தைப் பெருக்கிடவே திட்டஞ் சூழ்ந்தார்
தம்மொழியை என்வளத்தால் தகுதி செய்தார்.
அந்நிலையி லவர்மொழியே செவ்வி தென்றார்
அம்மொழியைத் தெய்வமே யருளிற் றென்றார்.
இந்நிலையைத் தமிழ்மக்கள் மெய்யென் றெண்ணி
ஈன்றஎன்? வயிறெரிய இழிவு பூண்டார்.

கல்லூர்ந்து முள்ளூர்ந்து மண்ணெ டுத்துக்
கட்டியசெல் புற்றத்தில் கருநா கந்தான்
மெல்லூர்ந்து தன்னிருக்கை மேவல் போல
மேந்தமிழர் நாகரிகப் பண்பா டெல்லாம்
வல்லூறின் தன்மையுறு வடவர் தாமே
வெளவியென தாட்சியினை வறிதே யாக்கிப்
பல்லூரும் பாசியது பான்மை போலப்
பன்னலமும் படிப்படியாய்ப் பற்றிக் கொண்டார்.

(வேறு)

ஈண்டிருந்த என்மக்கள் வடமொழியைக் கற்றே
எழில்நூல்க ளம்மொழியி லியற்றியெனை மறந்தார்
ஆண்டிருந்த தமிழரெலா மம்மொழியைக் கற்றல்
அரும்பெருமை யென்றெண்ணி யென்தாய்மை யிகழ்ந்தார்
பூண்டிருந்த தமிழ்ப்பண்பு புலிநிகர்த்த வீரம்
புன்மையெனக் கருதியயல் நாகரிக மேற்றார்
மாண்டிருந்த களவுமுறை மதியாதே யொன்றார்
மணமுறையில் மாழ்கியென்றன் மாட்சியினைச் சிதைத்தார்.

பண்டையநற் கோயிலுற்ற பரம்பொருளை வழுத்தப்
பயன்பட்ட எனையொருவிப் பரமொழியை ஏற்றார்
கண்டபல விழவுகளில் கடிமணத்தில் மற்றும்
கருமமுறு சடங்குகளில் வடமொழியை வேட்டார்
விண்டதமிழ் வீதிகளில் விளம்பரங்கள் மற்றும்
விரும்புபண விடைத்தாள்க ளஞ்சலட்டை யாவும்
அண்டவந்த அயல்மொழியா லாக்கியெனை நாளும்
அன்னைதமிழ் அன்னைதமி ழென்றலறிக் கெடுத்தார்.

உலகினிலே முதன்மொழியா யுதித்திட்ட நானும்
உத்தமநற் றமிழர்களை யீன்றெடுத்து வளர்த்தே
யிலகுலகில் ஏற்றமுறச் சேய்தேற்குப் பலனும்
என்னைவட மொழிபெற்ற சேயென்று சொன்னார்
பலகாலும் பயின்றசில தமிழர்களும்; ஆனால்
பாவியேன் நானவரைப் பெற்றபெரும் பாசம்
விலகாது விலங்குதலால் இன்னுமுயர் தாங்கி
விளங்கிடுவர் மீண்டுமெனும் விருப்பாலே யிருந்தேன்.

என்னருமை நூல்களொடு தென்குமரி நாட்டை
இமிழ்கடல்கோள் செய்திட்ட இழப்புசொலப் போமோ
பன்னரிய கொடுமையிழை பன்மொழியின் கலப்பால்
பான்மையுறு சேரத்தை வேங்கடத்தை யிழந்தோம்
இன்னுமிவண் இந்திமொழி யரசோச்ச வந்தால்
இருக்கும்பல் தமிழ்ப்பகுதி இழந்திடவே நேரும்
இன்னல்தரு தென்கடலும் எஞ்சியதை யுண்ணும்
இலங்குதமி ழினத்தோடே யானிணைந்து மாய்வேன்.

எண்ணரிய இத்துயரை யென்னிடமே சொன்ன
எழில்தமிழா மன்னையவள் முகத்திலுறு கண்கள்
புண்ணுமிழுங் குருதிபோற் செந்நீரைச் சிந்த
புந்திதடு மாறியநான் திடுக்கெனவே விழித்தேன்
கண்ணிருந்து செந்நீரை யுகுத்ததமி ழன்னை
கண்டிலனுய் நனவன்று கனவென்ப துணர்ந்தேன்
நண்ணியவித் துயருரையை நன்முறையில் உன்னி
நமதன்னைக் குறைகளைவோம் நந்தமிழர் வாரீர்,

கடல் உலகம்

பண்ணன்

கடல் என்றதும் நமக்கு அதன் நெடு நீல வண்ணமும் வெண்மை நுரை பெருக வரும் பெரும் அலைகளுமே நம்முடைய கவனத்துக்கு வருகின்றன. அதன் எழிலான காட்சி நம்மைக் கவருகிறது.

நிலத்திலே இருக்கும்வரை கடலின் வலிமை நம்முடைய எண்ணத்தில் படுவதில்லை. வீசிவரும் அலைக்கரங்களால் வெண்மணற் பரப்பை தொட்டு மீளும் இடத்தை விட்டுக் கடல் வழியே பயணத்தைத் தொடங்கி சில நாட்கள் சென்றதும், நம்மையும் மறந்து ஏதோ ஒரு தனிமையான உலகத்தில் நாம் இருக்கிறோம் என்கிற எண்ணம் நம்மைத் தானாகவே சூழ்ந்துவிடுகிறது.

மனிதன் தனது அறிவாற்றலால் எத்தனையோ வியத்தகு செயல்களை முடித்திருக்கிறான். ஆராய்ச்சியின் பயனாய் அளவிறந்த பொருள்களை உருவாக்கியிருக்கிறான். ஆனால் அவன் இதுவரை கடலின் ஆற்றலை அடக்கியதில்லை. அதை அடக்கும் வலிமையை என்றும் பெறுவதும் இயலாது.

மண்ணுலகத்தின் எல்லையை எத்தனையோ முறை அது மாற்றியிருக்கிறது. மிகப் பெரிய நிலப் பரப்புகளைக் காவுகொண்டிருக்கிறது. அதற்கு ஈடாக புது நிலப் பரப்புகளை உருவாக்கியிருக்கிறது.

ஒரு காலத்தில் இமயமலைப் பகுதியும் அதற்கு வடக்கே உள்ள நிலப் பரப்பும் கடலடியில் இருந்தவையே என்பதைக் கண்டுபிடித்துள்ளனர். 20000 அடிக்கு மேலே இமயத்தின் சில பகுதிகளில் கடல் வாழ் உயிரினங்களின் எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. தெற்கு ஐரோப்பாவும் வட ஆப்பிரிக்கப் பகுதியும் கடல் தந்த நிலப் பரப்பாகும். இப்பகுதிகளில் கடற் சுண்ணும்புக் கற்கள் பாறைகளாக விளங்குகின்றன. கடற் சுண்ணும்புக் கற்பாறைகளே எகிப்திலுள்ள 'ஸ்பிங்சையும்' அங்குள்ள பழைய நாகரிகத்தையும் அதிசயத்தையும் விளக்கி நிற்கும் 'பிரமிட்டு'களையும் உருவாக்க உதவியுள்ளன.

டோவரிலுள்ள புகழ்பெற்ற வெண்மையான, கூரியமலை முகடுகள் கடலின் அன்பளிப்புகளாகும். கென்டகியிலிருக்கும் 'மம்மத்' குகை பல மைல் நீளம் சுற்றிப் பார்க்கும் 25 அடி உயரமுள்ள சுரங்கப்பாதை அமைந்திருப்பதைக் காணலாம்.

இவைமட்டுமல்லாமல் இன்றைக்குக் காணும் நிலப் பரப்பில் உண்டாகியிருக்கும் பல அதிசயங்களை உருவாக்கிய பெருமை கடலையே சாரும். இன்றும் சில வேளைகளில் கடலின் கொந்தளிப்புகளால் நிலத்தின் பற்பல மாற்றங்கள் அடிக்கடி ஏற்பட்டு வருகின்றன.

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு உறைபனியால் மூடிக்கிடந்த உலகில், மெல்ல மெல்ல பனி உருகிய பின் அளவிலடங்கா மாற்றங்களைச் செய்து, இனியும் செய்யக் காத்திருக்கும் பெருமையைத் தாங்கியுள்ளது கடல்தான். நீர் நிறைவு ஏற்பட்ட பின்னர் கடலின் விளையாடலுக்குப் பெருந் துணையாய் இருப்பது காற்று. கடலின் அலைக்கரங்களை உயர்த்தி அணைத்து, தான் செல்லும் வழியில் அளவிறந்த வியத்தகு பணிகளை ஆற்றிச் செல்லுவதும் இதுவே.

கடல் உள்ளவரை காற்றின் செலவுக் கேற்ப அதனுடைய நீர் அலைந்தே யாக வேண்டும். காற்றின் விரைவு அலைகளை எழ வைக்கிறது. எழும் அலைகள் பலவகையான மாறுதலைப் பெறுவதோடு வேகத்திலும் செல்லும் திசையிலும் வேறுபாடுறுகின்றன. பல அலைகள் எழுந்து கரையை அடையாமல் வழியிலேயே அழிந்துபடுதல் உண்டு. அலைகள் ஒன்றோடொன்று மோதுங்கால் இடி முழக்கத்தைப்போல ஒலி பெருக்கும். அலைகள் தாம் செல்லும் போக்கில், மோதுதல்களால் நீர்ச் சுழல்கள் ஏற்படும் அவ்வேளைகளில் கடற்பயணம் மிகுதியும் தடைப்படும். அலைகளின் மோதல் சில சமயங்கள் 600 மைல்களிலிருந்து 800 மைல்கள் வரை பரவும். அந்தக் காட்சி மிகப் பயங்கரமாக இருக்கும். ஒரே சமயத்தில் இரண்டு மூன்று மைல் பரப்பளவுக்கு அலைகளின் இடையறாத மோதல் நிகழும். அவ்வேளைகளில் கடலே வெடித்துவிடுவது போலத் தோன்றும்.

சில சந்தர்ப்பங்களில் அலையின் எழுச்சி 25 அடி உயரம் இருக்கும். அதன் உயரம் இருமடங்காக இருப்பது மிகவும் அருமை; புயலின் வேகத்தில் உருவாகும் அலையின் உயரம் எவ்வளவு என்பது வாதத்திற்குரியதே. கப்பலோட்டிகள் தங்கள் பயணத்தின் போது 60 அடி உயரமான அலைகளைக் கண்டிருப்பதாகக் கூறியுள்ளனர். அலையின் உயர்ச்சி அளவைக் கணக்கிட தனிக்கருவி யொன்று ஒவ்வொரு கப்பலிலும் இருக்கும்.

1933ம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் ஐக்கியநாடுகளின் கப்பல் ஒன்று மணிலாவிலிருந்து சாண்டியாவுக்குப் புறப்பட்டது. வழியில் மிகப் பெரிய புயலைச் சந்திக்க நேரிட்டது. அப்பொழுது கடல் ஒரு பெரும் மலையளவு பொங்கி எழுந்ததை அதன் மாலுமி கண்டார். சிறிது நேரத்தில் அக்கப்பல் அலையின் எழுச்சியால் 112 அடி உயரம் தூக்கி எறியப்பட்டதாம்.

கடலின் நடுவில் அலையின் உயரம் எவ்வளவு உயரமாக இருந்தாலும் கரையோரங்கள் வரும்போது புயல் அலைகள் மிகவும் அழிவு செய்யக் கூடியவை. இடியென முழங்கி விரையும் புயல் அலை கலங்கரை விளக்குகளையும் பெரிய கட்டிடங்களையும் அழித்து விடுகிறது. மழை காலங்களில் கொடுமையாக உயர்ந்து விரையும் அலையின் எடையளவு சதுர அடிக்கு 6000 பவுண்டுகள் இருக்கும். 1872ம் ஆண்டில் மழைக்காலத்தில் எழுந்து வீசிய அலை, ஸ்காட்லாந்திலுள்ள' விக் (Wick) என்னுமிடத்தில் மோதியது. புயல் ஓய்ந்ததும் அவ்விடத்தில் ஏற்பட்ட உடைப்பில் 1350 டன் எடையுள்ள நிலப்பரப்பை உண்டு கடல் தன் பசியை ஆற்றிக் கொண்டிருந்தது. ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு முன்னர் அது காவு கொண்டது வெறும் ஒத்திகை போலவே இருந்தது. ஏனெனில் பின்னர் ஏற்பட்ட புயல் ஏறத்தாழ 2600 டன் எடையுள்ள நிலபரப்பைச் அரித்து விட்டது.

அலையின் மோதல் குறைந்ததும் நாம் காணுகின்ற காட்சி நம்மால் நம்ப முடியாத அளவுக்குத் தோன்றும், ஏதோ ஒரு 'தெய்வீக' விளைவு நேரிட்டு விட்டது போல எண்ண வைக்கும்.

1840ம் ஆண்டு ஒருநாள் இரவில் கடல் கொந்தளிப்பு ஏற்பட்டது. தனது நடுக்கும் உறுமலோடு அதன் அலைகள் ஒன்றோடொன்று மோதிக் கொண்டன. காலையில் பார்க்கும் பொழுது வலிமையாக எஃகுத்தாளிடப் பட்ட எட்டிஸ்டோன் (Eddystoen) விளக்கு உடைக்கப் பட்டிருந்தது. அதனுள் நீர் நிறைந்திருந்தது. அதைப்போலவே ஒரு நவம்பர் திங்களில் பெல்ராக் விளக்கின் (BallRock light) ஏணி கடலிலிருந்து 86 அடி உயரம்வரை முறிக்கப்பட்டது. மழைக்காகப் புயலின் போது பிஷப்ராக விளக்கின் (Bishop Rocklight) கடல் மட்டத்திலிருந்து 100 அடி உயரத்திலிருந்த மணி ஒன்று உடைக்கப்பட்டது. 1851ல் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அட்லாண்டிக் கடற்கரையிலிருந்த 97 அடி உயரமுள்ள கோபுரம்வரை அலைஎழுந்து அதிலிருந்த விளக்கு நனைக்கப்பட்டது. டிசம்பர் திங்களில் ஓரிகன் கடற்கரையில், டிரினிகாட் உச்சி விளக்கின் காவலாளி, விளக்கின் உயரத்திற்குச் சமமாக ஓர் நீர் வெண்சுவர் எழுந்து கரை நோக்கி நகர்ந்து வருவதைக் கண்டான். அது 196 அடி உயரமுள்ள அதன் உச்சி முழுவதையும் நனைக்கப் பட்டதை உணர்ந்த பின்பே அது கடலின் புயல் கொந்தளிப்பு என்பதை அறிந்தான். பாறையாலான கரையை உடைய இடங்களில் அலை மோதிச் சுழலும் போதும் கற்களையும் பாறைத் துண்டுகளையும் அள்ளி வீசுமாம், ஒருமுறை தில்லமுக் (Tilla Mook) மலைமேலுள்ள கலங்கரைவிளக்குக் காவலாளியின் வீட்டின் மீது கடலிலிருந்து 100 அடி உயரத்தில் 135 பவுண்டு எடையுள்ள பாறைத்துண்டு தூக்கி வீசியெறியப் பட்டதாம். அப்போது கூரையில் 20 அடிச் சுற்றளவு துவாரத்தை ஏற்படுத்தியது.

கண்ணதாசனின் அன்னையார் விசாலாட்சி ஆச்சியின் நினைவாக-காரைக்குடி அழகப்பா தமிழ்மன்றம் நடத்திய கவிதைப் போட்டியில் முதற் பரிசு பெற்ற சட்டக் கல்லூரி மாணவர் கா. வேழவேந்தன்.

கடல் எனும் காலன் அழிவுகளை எழுந்துவீசும் அலைகளால் மட்டுமே செய்வதில்லை. பார்ப்பதற்கு அமைதியாகத் தோன்றினாலும் மெல்ல மெல்ல அழித்து நிலத்தின் பல பகுதிகளை உட்கொண்டு விடுகிறது. மலைப் பகுதிகளைக் கொண்டிருக்கும் கடற்கரைகளில் அழகான மலைக் குகைடவுகளை ஏற்படுத்துகிறது. மனிதனது துண்ணறிவுத் திறனால் செதுக்கி அமைக்க முடியாத கலை நுட்பம் பொருந்திய அழகான வேலைப்பாடுகளையும் பல இடங்களில் செய்து வைத்திருக்கிறது.

அச்சந்தரும் கடல் அலை வீச்சுகளும் சில வேளைகளில் நமக்குப் பயனுள்ள உதவிகளையும் செய்து வந்துள்ளன. 1868ம் ஆண்டில் தென் அமெரிக்காவின் மேற்குக் கரையில் நில நடுக்கம் ஏற்பட்டது. அப்போது ஏற்பட்ட கொந்தளிப்பில் கால் மைல் தூரத்திற்கு கடல்நீர் நிலத்தினுள் புகுந்தது. அப்போது கடற்கரை 40 அடி தூரம் சகதியால் இருந்ததை மாற்றி, படகுகள் கரையோரம் வந்து போவதற்கு வசதியாய் அமைந்தது.

1946-ம் ஆண்டு முதல் நாளன்று ஹாவாய்த் தீவின் கடற்கரையிலிருந்தவர்கள் மிகப் பயங்கரமான பேரொலியைக் கேட்டனர். திடீரென அப்பகுதி முழுதும் வியப்பான அமைதி ஏற்பட்டது. அப்பேரொலி நில நடுக்கத்தின் விளைவால் உண்டான கடற் கொந்தளிப்பின் பயங்கர எதிரொலி என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. அதுவும் 2300 மைல்களுக்கு அப்பால் எழுந்து எதிரொலித்தது. சிறு பொழுதில் கடல் நீர் 25 அடி உயரத்துக்கு எழுந்து நிலத்தில் புகுந்தது. புகுந்த கடல்நீர் அங்குள்ள மக்களையும் வீடுகளையும் வாரிக்கொண்டு மீண்டது. தொடக்கத்தில் கடல் அலை 2300 மைல்களுக்கு அப்பால் நீர் மட்டத்திலிருந்து இரண்டு அல்லது மூன்றடி உயரத்தில் எழுந்த அலை 25 உயரத்திற்கு வளர்ந்து மணிக்கு சுமார் 470 மைல் வேகத்தில் விரைந்து வந்து ஹாவாய்த் தீவுக்குள் நுழைந்திருக்கிறதென்றால் அதன் விளைவு எத்தனை கொடுமை உள்ளதாய் இருந்திருக்கும். அதன் கொடுமையை இன்று நினைத்தாலும் நெஞ்சு நடுங்குகிறது.

மிகவும் அச்சம் நிறைந்த அழிவு 1737-ம் ஆண்டு அக்டோபர் 7-ம் நாளன்று வங்காளவிரிகுடாவினுல் நேர்ந்திருக்கிறது. அப்பொழுது 20,000 படகுகள் அழிக்கப்பட்டன. 3,00,000 மக்கள் மூழ்கடிக்கப்பட்டனர்.

ஆனால் பரந்த கடலில் மாபெரும், வியப்பு மிகுந்த அலைகள் தோன்றுவது கண்ணுக்குத் தெரியாது. நீர் மூழ்கிக் கப்பல்களைப்போல, கடலின் ஆழப் பகுதிகளிலே பாய்ந்து விரையும். கப்பலுக்கு நேரே வந்தபொழுது நீர் மூழ்கிப் கப்பல் திடீரெனத் தனது தாக்குதலைத் தொடங்குவதுபோலவே அலையும் வெளிக் கிளம்பும். அப்படிப்பட்ட அலைகள் நீரோட்டங்களோடு மோதுங்கால் அளவிடமுடியாத வேகத்தில் நீர்மட்டத்தில் தோன்றும். அப்போது அதன் உயரம் 300 அடிகள்கூட இருக்கும்.

உலகப் பரப்பின் நான்கில் மூன்று பகுதி கடலாக இருக்கிறது. பல மைல்களுக்கு அடியில் மிகுதியும் ஆழமான பகுதிகளைக் காணும்பொழுது. பகலவனது ஒளியே நுழையாத, உலகத்தில் சரிபாதி அளவினைக் கொண்டதாக இருக்கிறது. அப்பரந்த பகுதி பகலவனின் ஒளிக் கதிர் பாயும் அளவுக்கும் கடலடி நில மட்டத்திற்கும் இடைப்பட்ட பரப்பாகும். அங்குதான் கடலின் மறைவுகள் (Secrsts) உள்ளடங்கியுள்ளன. ★

லுமும்பா படுகொலை

லெஃப்டிஸ்ட்



காங்கோவின் பிரதமராயிருந்த பாட்ரிஸ் லுமும்பா படுகொலை செய்யப்பட்டுவிட்டார்.

அவரைக் கொன்று குவித்த கொலை பாதகர்கள் "ஏழு மாதத் தலைவலி தீர்ந்தது" என்று மகிழ்ச்சிகொண்டாடியிருக்கின்றனர்!

ஒரு பெரும் விடுதலை வீரனின் மறைவில் பாதுகாப்பும் மகிழ்ச்சியும் தேடுகிற 'கல்யாண குண விசேஷம்' கொண்ட கோழைகள் காங்கோவிலும் காணப்படுகின்றனர்! இது ஆச்சரியத்திற்குரியதில்லைதான்!

ஆனால்...:

லுமும்பாவின் மறைவு இன்று மகிழ்ச்சி கொண்டாடுகிற ஷோம்பே கும்பலின் ஆணவத்திற்கு முடிவு கட்டும் ஆற்றலும் படைத்தது என்பதில் சந்தேகமில்லை.

லுமும்பா! எழுந்து நிற்கும் ஆப்பிரிக்க மக்களுக்கு, இனி ஒரு ஆதர்ஸ புருஷன்!

பிரதமரானபோது அவருக்குக் கிட்டாத பெரும்புகழ் இன்று, அவரது சாவில் அவரைத் தேடி வந்து ஒட்டிக் கொண்டுவிட்டது.

காங்கோவில் மட்டுமே, மக்களைத் திரட்டும் ஆற்றல் பெற்றிருந்த அந்தப் பெயர், இனி, ஆப்பிரிக்கா முழுவதும்-ஏன் விடுதலை கோரும் திசை எட்டும், தேசிய எழுச்சிக்கு ஒரு காந்த சக்தி வாய்ந்த சின்னமாகி விட்டது!

அவரது தியாகம், இனி, காங்கோ மக்களுக்குமட்டுமின்றிவிடுதலை விரும்பிகள் அனைவருக்கும் வீரமூட்டும், சுடரொளியாகி விட்டது!

அவர் தழுவிய வீரச்சாவு, விடுதலை வரலாற்றில் புதியதோர் திருப்பத்தையே நிகழ்த்தப் போகிறது!

அவரைக் காவு கொண்ட ஏகாதிபத்திய வெறியர்களும், அவர்களுக்குத் துணைபோன துரோகக் கும்பலும், லுமும்பாவின் உயிர்த்தியாகம் உருவாக்கப் போகும் விளைவுகளைக் கண்டுவிட்ட பின்னர்தான் பழிவாங்கப்பட விருக்கின்றனர்.

லுமும்பா படுகொலை, விடுதலைக்குப் போராடும் மக்களுக்கு வற்புறுத்துவதெல்லாம், வெறுத்து பகைத்துக் கொள்ளப்பட வேண்டியவர்கள், அடிமை கொண்டுள்ள ஏகாதிபத்திய வாதிகள் மட்டுமல்ல-பிறந்த மண்ணுக்கு மனமறிந்து துரோகம் புரியும் சண்டாளர்களும் கூடத்தான் என்பதுதான்.

பின்னணி

குடிதழுவிக் கோலோச்சிய மன்னர் பரம்பரை காங்கோவில் இருந்ததில்லை!

அகமும் புறமும், பாட்டும் தொகையும், சிலம்பும் மேகலையும் இன்ன பிறவும் கொண்ட இலக்கியப் பாரம் பரியம் அந்த மக்களுக்குக் கிடையாது!

தேர்ந்தெடுத்த கவர்ச்சிக்கேந்திரங்களுக்குப் பொட்டிட்டுக் காட்டி, காண்போரைச் சுண்டி இழுக்கும் ஆடலும், செவிகொடுத்தோரை மயக்கும் பாடலும் பிறவுமான அழகு கொழிக்கும் செழுங்கலைகளுக்கு காங்கோ மக்கள் சொந்தக்காரர்கள் அல்லர்!

முற்றி முதிர்ந்த நாககரிம்-பூரணமான வாழ்வைத் தேடிப் பெற்று, அதனைச் செம்மைப் படுத்தும்போது திரளும் நறுந்தேறல்களை முறையாகக் காட்டிக் கலந்து ஒரு சமுதாயம் உருவாக்கும் நாகரிகம்-எதனையும் காங்கோ மக்களுக்கு அவர்களது முன்னோர்கள் தந்துவிட்டுப் போகவில்லை!

சுருக்கமாக-பேசி மகிழ பழம் பெருமைகள் ஏதும் காங்கோவிற்கு இல்லை.

காங்கோ ஆப்பிரிக்காவின் மையத்தில் 90 லட்சம் சதுர மைல் பரப்பளவு கொண்ட நாடு. ஒரு கோடியே 40 லட்சம் மக்கள், அங்கே சுமார் 150 குலத்தவராகப் பிரிந்து வாழ்கின்றனர். பேசுவதோ 500 வரை வரி வடிவம் கொண்ட 'பண்டு' குடும்பத்து மொழிகள்! லூபா என்னுமொரு மொழி, பொது மொழி!

திருவிழா நாட்களைத் தவிர, இதர நாட்களில் மக்கள், அங்கே அரை நிர்வாணிகள்தான்.

இந்த மக்களின் விடுதலை எழுச்சிக்குத் தலைமை தாங்கினான் லுமும்பா!

லுமும்பா-1925-ம் ஆண்டு பிறந்தான். சுரங்கங்கள் நிறைந்த கசாய் மாநிலத்தில் வெம்போன்யாமா எனும் கிராமம் அவனது சொந்த ஊர், குடியானவர்களான அவனதுபெற்றோர், ஒரு கத்தோலிக்கப் பள்ளியில் லுமும்பாவிற்குக் கல்வியளித்தனர்.

ஒரு வரி வசூல் செய்வோனாக வாழ்வைத் துவங்கிய லுமும்பாவிற்கு இளமைப் பருவத்திலேயே விடுதலை வேட்கை எழுந்தது.

ஸ்டான்லிவிலி நகரில் உதவி போஸ்ட் மாஸ்டராக உத்தியோக உயர்வுபெற்ற லுமும்பா வேலை செய்து கொண்டே காங்கோவின் விடுதலைக்கான அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தான்.

பொய்க்குற்றம் சுமத்தி பெல்ஜிய ஏகாதிபத்தியம் லுமும்பாவைச் சிறைக்குள் பூட்டிற்று. இரண்டாண்டு கடுங்காவல் அவனுக்கு ஒரு முழு முதல் தேசிய இயக்கத்தைத் தோற்றுவிக்கும் உறுதியைக் கொடுத்தது.

சிறையிலிருந்து வெளி வந்ததும், பிரம்மிக்கத்தக்க துணிவோடு ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு காங்கோ மக்களின் தேசிய எழுச்சிக்கு புத்துயிர் அளித்தான் லுமும்பா.

1958-ல் லுமும்பாவின் தேசியக் கட்சி 33 வயதுமட்டுமே நிரம்பிய இளைஞனின் தலைமையில் வேகமான வளர்ச்சியைப் பெற்றுவிட்டது! காங்கோ முழுவதும் கிளைகள்தோன்றின. உருக்குப்போன்ற கட்டுப் பாட்டுடன் தேசிய இயக்கம் வளர்ந்தது.

மூன்று ஆண்டுகள்

லுமும்பாவின் தலைமையை ஏற்றுக் கொண்ட காங்கோ மக்கள் சுமார் 3 ஆண்டுகளுக்குள் விடுதலை கண்டவர்கள்.

கதை எழுதி நாடகமாடி 'கலை' வளர்த்து விடுதலை வாங்கிவிடலாம் என்று லுமும்பா போதித்ததில்லை.

லுமும்பா நாக்குத் திறம் படைத்தவன்தான். ஆனால் வெறும் அணி அலங்கார விளையாட்டுகளில் அவன் ஈடுபட்டதில்லை!

மேடை ஏறினால் மடை திறந்த வெள்ளம்போல முழங்குவான் லுமும்பா! ஆனால் அந்தப் பேச்சுக்கள் இளைஞரின் பருவ ஏவுதலுக்கு தீனி படைக்கவில்லை-நாக்குச் சுவைக்கு பக்குவம் சமைக்கவில்லை.

இரண்டாம் யுத்த முடிவில், அடிமைப் பட்டுக் கிடந்த மக்கள் உலகு தழுவிய கிளர்ச்சியில் ஈடுபட்டனர். பல்வேறு தேசிய சமூகங்களும் பிறப்புரிமையான சுதந்திரத்திற்காகப் போர்க்கொடி உயர்த்தின.

ஏகாதிபத்தியங்களின் இறுதி மூச்சு, கணக்கிடப்படத் துவங்கிற்று.

இருண்ட கண்டம் என்றழைக்கப் படும் ஆப்பிரிக்காவிலும் விடுதலை ஒளி ஊடுருவ ஆரம்பித்தது. பல ஆப்பிரிக்க நாடுகளும் சுதந்திர விழாக் கொண்டாடின!

விடுதலைக்குச் சாதகமான இந்த உலகச் சூழ்நிலையை உணரவும், பயன் படுத்திக் கொள்ளவுமான அறிவாற்றல் லுமும்பாவிற்கு இருந்தது.

லுமும்பாவின் தேசீயக் கட்சியினர், விடுதலையின் மாண்பினை மக்களுக்கு உணர்த்தி அதனைப்பெற எத்தியாகமும் செய்யும் மனஉறுதியை வளர்த்தனர்.

ஆபத்து அணுகி வருவதை உணர்ந்த ஏகாதிபத்தியம் ஆசை வலை விரித்தது. லுமும்பாவை பிரஸ்ஸல்ஸ் நகருக்கு அழைத்து இச்சகம் பேசிப்பார்த்தது. விழமறுத்தான் லுமும்பா. தாயகம் திரும்பியதும் ஆக்கரா நகர் சென்று அங்கு ஆப்பிரிக்க மக்களின் மாநாட்டில் விடுதலை முழக்கமிட்டான் லுமும்பா.

காங்கோவை ஆளும் பெல்ஜிய பிரஞ்சு ஏகாதிபத்தியங்கள் ஆத்திரங் கொண்டன.

ஆக்கராவிலிருந்து காங்கோ திரும்பிய லுமும்பாவிற்கு விழாவெடுத்தனர், பரணிபாடினர் காங்கோ மக்கள்.

லுமும்பாவைவரவேற்க ஸ்டான்லிவிலி நகரில் திரண்ட மக்கள் மீது துப்பாக்கி நீட்டப்பட்டது! 50 பேர், கொல்லப்பட்டார்கள்!

இந்த மிலேச்சத்தனமான அடக்குமுறை, காங்கோ மக்களின் கோபத் தீயை மூட்டி கொழுந்துவிட்டெறியச் செய்தது! அன்று முதல் இடையறுத போராட்டம்தான்.

விடுதலைக்காகச் சாவதில் உள்ள பெருமையை லுமும்பா எடுத்துரைத்திருந்தான்! அது வீண் போகவில்லை.

அடக்குமுறை கூர்மழுங்கி விட்ட நிலை பிறந்தது! பெல்ஜியத்திற்கு, சுதந்திரம் வழங்குவதனைத் தவிர வேறு வழி இருக்கவில்லை.

சிறையிலிருந்த லுமும்பாவை அழைத்து, விடுதலைச் சாசனத்தில் கையொப்பமிட்டுத் தந்தது. பெல்ஜிய ஏகாதிபத்தியம்!

காங்கோ விடுதலை பெற்றது!

75 ஆண்டுகளாக நீடித்த பெல்ஜிய ஏகாதிபத்திய காலனி ஆட்சிக்கு 1960 ஜுன் 30-ந்தேதி முடிவு கூறி வழி அனுப்பினர் காங்கோ மக்கள்.

லுமும்பா பிரதமரானர்!

ஏகாதிபத்தியச் சதி!

வாசல் வழியாக வெளியேறிவிட்டு, கொல்லைப்புறமாக உள்ளே நுழைந்துவிட சதி செய்தது பெல்ஜிய ஏகாதிபத்தியம்! விடுதலை விழாவிற்காகக் கட்டப்பட்ட தோரணங்கள் அவிழ்க்கப் படுமுன், காங்கோ மக்கள், மீண்டும், பகைவர்களை, நகரவீதிகளில் சந்திக்க நேரிட்டது.

பெல்ஜியத்துருப்புகளைக் காங்கோவை விட்டு, வெளியேற வேண்டுமென உத்தரவிட்டார், லுமும்பா! பெல்ஜியம் மறுத்தது.

லுமும்பா, ஐ. நா. சபையின் உதவியைக் கோரினர்.

ஐ. நா. பாதுகாப்புச் சபை அன்று செய்த தவறுதான், இன்று லுமும்பாவின் உயிர் பறிபோனதற்கு. அது பொறுப்பேற்க வேண்டி வந்துள்ளது.

பெல்ஜிய ஏகாதிபத்தியத்தின் போக்கினை, சந்தேகமறக் கண்டித்து, அதற்கு நாள்குறித்து தவணைதந்து, வெளியேறுக என கண்டிப்பான உத்தரவிட வேண்டிய ஐ. நா. பாதுகாப்புச் சபை, வழவழாத்தீர்மானம் ஒன்றினை நிறைவேற்றி, படை ஒன்றை காங்கோவிற்கு அனுப்பிற்று.

ஐ. நா. பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் வல்லரசுகளில், பெல்ஜியத்திற்கு நண்பர்கள் கிடைத்தனர். அவர்கள், ஒருநாட்டின் விடுதலையைப் பாதுகாத்துத் தரும் பொறுப்பு தங்களிடமுள்ளதை மறந்தனர். குறுகிய நோக்கமும், ஏகாதிபத்திய அமைப்பில் மனச்சாய்வும் கொண்ட நிலையில், கண்டிப்புக்காட்ட மறுத்து. காலங்கடத்தும் வேலையில் ஈடுபட்டனர்.

விளைவுதான்காங்கோவிற்குள்ளேயே, பெல்ஜியம். 'ஷோம்பே'க்களை உருவாக்க முடிந்தது. கசவுபுவைக் கைக்குள் போட்டுக் கொள்ளவும், மொபுடுவைத் தூண்டிவிடவும் வழிபிறந்தது.

— முதற் பக்கத் தொடர்ச்சி —

நல்ல வைரத்திற்குச் சொன்னதெல்லாம் விலைதான்.

அல்லாத கற்களுக்குச் சுய மதிப்பே இல்லைதான்.

அவர்கள் பாவம்! பாவம்!

தாங்கள் சொல்வதெல்லாம் மெய்யாக மெய்யாக ஊர் நம்புவதாகப் பொய்யாகப் பொய்யாக அவர்கள் நம்பிக்கொண்டிருக்கிறார்கள்.

தூரக்காட்சிகளில் பயங்கரமான மலையிலிருந்து எவனோ ஒரு அப்பாவியைக் குதிக்க வைத்துப் படமெடுத்து, பக்கத்துக் காட்சிகளில் தங்கள் முகத்தைக் காட்டிக்கொண்டு, தாங்களே மலையிலிருந்தும் குதித்தாக உலகத்தை நம்ப வைப்பவர்கள்—

தூரக்காட்சிகளில் தாங்களே குதித்துவிட்டு,பக்கத்துக் காட்சியில் இன்னொருவன் முகத்தை வைத்துவிட்டார்கள்.

புகைப்படம் பிடிக்கும்போது, நேராகநிற்கும் மனிதன்புகைப்படக் கருவியில் தலை கீழாகத் தெரிகிறான்.

அது கழுவி வரும்போது நேராக நிற்கிறான்.

ஆனால் அவர்களோ—

தலைகீழாக நிற்கிறார்கள். கருவியில்நேராக விழுகிறார்கள்.

கழுவி வரும்போது தலை கீழாகவே தெரிகிறார்கள்.

நான் அவர்களுக்கே சொல்கிறேன்.

என் பரிதாபத்துக்குரிய நண்பர்களே!

ஊருக்கு முன்னால் நாமெல்லாம் சேர்ந்துநடித்திருக்கிறோம்.

ஆனால், என்ன பரிதாபமோ, நீங்கள் என்னிடமே நடிக்கத் தொடங்கிவிட்டீர்கள்.

மருத்துவச்சியிடம் உடம்பை மறைத்தால் பிள்ளை பிறக்காது, பிரசவம் நடக்காது என்பது உங்களுக்குத் தெரியாதா?

தெரியும்!

ஆனால் நீங்கள் கணவனுக்கே உடம்பை மறைக்கிறீர்கள்.

கரு எப்படித் தரிக்கும்?

''ஒன்றுபடுவோம்' என்கிறீர்கள்.

அருகில் வந்தால்-உங்கள் புனிதமான கால்களில் கிடக்கும் அருமையான செருப்புக்களைக் கழற்றிக் காட்டுகிறீர்கள்.

அதாவது—

''பிள்ளைவேண்டும் பிள்ளை வேண்டும்'' என்கிறீர்கள்.

அருகில்வந்தால் கதவை அடைக்கிறீர்கள்.

தோளோடு தோள்நின்ற என்னரிய தோழர்களே!

உங்கள் 'பாணி'யிலேயே நானும் உவமை சொல்வதற்கு மன்னியுங்கள்.

பழக்கம் என்பது பொல்லாத பகை.

வந்து விட்டது.

உங்களை நினைக்கும் போதெல்லாம் எனக்கு வேடிக்கையாகவே இருக்கிறது.

எவ்வளவு மோசமான அனுபவங்களையெல்லாம் இன்னும் இவன் காப்பாற்றிக் கொண்டிருக்கிறான் என்பது உங்களுக்குத் தெரியாதா?

ஓகோ-அதனால்தான் தீர்த்துக் கட்டிவிடவே முயன்றீர்களோ?

இன்னும் முயல்வீர்களோ?

செய்யுங்கள்!

எனக்குப் பின்னால் என்னை நினைத்துக் கொள்வதற்கு உலகத்திற்கு நான் இரண்டொரு எழுத்துக்களையாவது தந்து வைத்திருக்கிறேன்.

ஆனால் உங்களுக்குப் பிறகு ....

நீங்கள் எதை வைத்திருக்கிறீர்கள்?

மன்னிக்க வேண்டும்; மன்னிக்க வேண்டும்; நான் மறந்துவிட்டேன்.

நீங்கள்தான் 'பாங்கு'பாஸ் புத்தகம் வைத்திருக்கிறீர்களே!

கருணையே வடிவாகவும், இரக்கமே உருவாகவும் விளங்கும் தியாகமூர்த்திகளே!

ஆத்திரம் கொள்ளற்க!

''நாம் மறைந்து மறைந்துக் 'குறுக்குச்சால்' ஓட்டுகிறோம்.

இவன் வெளிப்படையாக அனைத்தையும் சொல்லி வேதனையைக் கட்டிக்கொள்கிறான்'' என்று வேண்டுமானால் கேலி செய்யுங்கள்,

இது என் சுபாவம்.

இளமையிலேயே மரணமடைவதற்காகவே நான் இந்தச் சுபாவத்தை வளர்த்துக் கொண்டேன்.

அரசியல் வெற்றிகளுக்காக ஆத்ம நியாயங்களை நான் தள்ளிவிடமாட்டேன்.

நீங்கள் வேண்டுமானால் என்னை உதைத்து ஒட்டிவிடுங்கள்.

ஆனால் ஒன்றுமட்டும் கேளுங்கள்!

நீங்கள் மாளிகையில் இருந்தாலும் - உங்கள் கால்படும் இடத்தையெல்லாம் தண்ணீர் விட்டுக் கழுவ வேண்டியிருக்கும்.

ஆனால், என் காலடிச் சுவடுகளெல்லாம் இராகம் போட்டுப் பாடிக்கொண்டிருக்கும்.

நீங்களே என்னிடம் வந்தீர்கள்.

இன்னும் வருவீர்கள்; என்னை உயிரோடு விட்டுவைத்தால்.

''என்ன கொழுப்பு? எவ்வளவு தலைக்கனம்?'' என்கிறீர்களா?

இது இலக்கியத்தை தின்றதால் வந்த கொழுப்பு!

என் தலை கனத்துத்தான் இருக்கிறது.

கல்லால் அல்ல—சொல்லால்.

சகிக்க முடிகிறதா? தாங்க முடிகிறதா?

காதுகளை மூடிக்கொள்ளுங்கள்.

பகைவன் சிரிப்பதைப் பார்க்காதீர்கள்.

பைத்தியம் பிடித்துவிடும்.

'பச்சை இரத்த'ங்களே!

'குமுறும் எரிமலை'களே!

'கொந்தளிக்கும் கடல்களே!'

நான் ''பேசுகிறேன் பேசுகிறேன்; பேசிக்கொண்டே இருக்கிறேன்.''

நீங்களும் 'கேளுங்கள் கேளுங்கள் கேட்டுக் கொண்டே' இருங்கள்.

நான் இன்னும் உங்களோடு இருப்பதற்குக் காரணம் ஒன்றே ஒன்றுதான்.

எனதுநண்பன், தான் ஏற்றுக்கொண்டு உங்களுக்குச் சொல்லிக் கொண்டிருக்கும் சில கருத்துக்கள் அமுலாக வேண்டும்.

அந்தக் கருத்துக்களுக்காக, அந்தப் பாவி மரணத்திற்கே தயாராகி விட்டான்.

அந்த மரணத்தைத் தடுத்து நிறுத்துங்கள்.

அந்த இலட்சிய மனிதனைக் காப்பாற்றுங்கள்.

அவனது கருத்துக்களை ஏற்று அமுல் நடத்துங்கள்.

—உங்களைவிட்டு என்னைத் துரத்துவதற்கு ஒரே வழி இது தான்.

அவனது கருத்துக்கள் அமுலாகிவிட்டால் இதோ-இப்பொழுதே...என்சிறகுகள் விரிந்திருக்கின்றன.

என்கால்கள் எவ்விக் கொண்டிருக்கின்றன.

பறந்து விடுகிறேன்;

பறந்தே போய் விடுகிறேன்.

பறக்கும்போதும் சிரித்துக் கொண்டுதான் பறப்பேன்.

எதையும் சிரித்துக் கொண்டேதான் செய்வேன்.

அடிபட்டபோதுகூடஅப்படித்தான்.

சிரித்தேன்; அழவில்லை.

கண்ணதாசன்

லுமும்பா படுகொலை

ஐ. நா. படைகளையே எதிர்க்கிற துணிவினை, கசவுபு மொபுடு, ஷோம்பே கும்பல் பெற்றதற்கு, ஐ. நா. பாதுகாப்புச் சபையின் கண்டிப்பற்ற, வழ வழாப் போக்குத்தான் காரணம் என்பதில் துளியும் சந்தேகமில்லை.

காங்கோவை ஆண்டு வந்த பெல்ஜியம், காங்கோ மக்களின் விடுதலைப் போராட்டத்திற்குத் தலை குனிய வேண்டி வந்தது. விடுதலையைத் தந்தும்விட்டது. பின்னர்; கொல்லைப்புறமாக மீண்டும் நுழைய நினைத்தது. காங்கோ பிரதமர், லுமும்பா, இந்த ஆக்கிரமிப்பைத் தடுக்க உதவி கோரினார், ஐ. நா. சபையிடம் இதுதான் பிரச்னை. இந்தச் சுலபமான பிரச்னையை, குழப்ப நிலைக்கு மறு பெயர் காங்கோ என்று ஆக்கியது முழுக்க முழுக்க ஐ. நா. சபைதான்.

குழப்பங்கள் முற்றும்போதே, இது போன்ற ஒரு நிலை ஏற்படும் என்று, தூரப் பார்வையுடையோர் எச்சரித்தும் ஐ. நா அதனைப்பொருட்படுத்தவில்லை.

எனவேதான், இன்று ஐ. நா. சபை, லுமும்பாவின் உயிர் இழப்பிற்குப் பொறுப்பேற்க வேண்டிய கசப்பான நிலை பிறந்திருக்கிறது.

இனி, ஐ. நா. சபையிடம் உதவி கோறமுன், உலகில் உள்ள சின்னஞ் சிறு நாடுகள், தயக்கம் காட்டும்! ஐ. நா. சபையிடம், உலகில் விடுதலைக்காக இன்றும் போராடிக்கொண்டிருக்கும் மக்கள் வைத்திருந்த நம்பிக்கையை, காங்கோ சிதறடித்துவிட்டது. ஐ. நாவின் பெருமையே இன்று குலைந்துவிட்டது! ஐ. நா. தோன்றிய நோக்கமே, பாதுகாப்புச் சபையின் கவனத்திலிருந்து மறைந்துவிட்டது.

லுமும்பா அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, பழி சுமந்து நிற்கும் ஐ. நா. இனியேனும், நியாயங்களுக்குப் பரிந்து பேசும் மனப்பக்குவம் பெறுமா என்பதைத் தான், உலகம் கவலையோடு எண்ணிப் பார்க்கிறது. இனி அடுத்து என்ன என்ற கேள்விக்கு, ஐ. நா. தரப்போகிற பதில் என்ன?

பிரதமர் என்ற பொறுப்பிலிருந்து லுமும்பா ஐ. நா. சபைக்கு வேண்டுகோள் விடுத்த - ஆறுமாதங்களுக்கு முன்பிருந்த-நிலைமை உடனடியாகத் திரும்பியாக வேண்டும்.

இந்தநிலை திரும்புவதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஐ. நா. பாதுகாப்புச் சபை, ஆப்பிரிக்க ஆசியநாடுகளில் வல்லரசுகோஷ்டிகளில் சேர்ந்துவிடாத நடுநிலை நாடுகளின் துணையுடன், காலந்தாழ்த்தாமல் மேற்கொண்டாக வேண்டும்.

இன்றேல், ஷோம்பே மிரட்டியிருப்பதைப் போல், காங்கோ ஒரு இரத்தக் குளியலுக்குத்தான் ஆளாக நேரிடும். ★

சிறுவர் கதைப் புத்தகங்களுக்கு

ஏஜண்டுகள் தேவை

ஏமாந்த பசு	7 ந. பை.
எமனின் தந்திரம்	7 ந. பை.
கூழாங்கல் பாயசம்	8 ந. பை.
அவள் ஓர் அசடு	10 ந. பை.
எருது கட்டிய வீடு	10 ந. பை.

ஏஜண்டுகள் 33⅓% கழிவு நீக்கி முன் பணம் அனுப்பவும் தபால் செலவு இனாம்.

விபரங்களுக்கு

சிறுவர் பண்ணை

சென்னை-5.

வெண்பாப் போட்டி 15.

★

ஈற்றடி

செண்டாக வந்த செருப்பு.

இறுதி நாள் 12-3-61.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை-6

விழியைக் கொடுத்தான்-அவள் வெறியைத் தந்தாள்

--: தியாகன் :--

காட்சி 4. பௌத்த விகாரமொன்றின் பின்புறமுள்ள நத்தவனம்

[சாம்ராட் அசோகனின் ஏகபுதல்வனுன இளவரசன் தர்ம விவர்த்தனன்-அவனின் தங்கை சாருமதியின் தோழியான சந்திர சகி என்பவளைக் காதலிக்கிருன். அவள், அவன் காதலை ஏற்க மறுத்துவிடுகிருள். காதல் தோல்வியால் மனமுடைந்து அவன் நந்தவனத்தில் உலவிக்கொண்டிருக்கும்போது, திஷ்யரட்சதை வந்து தனது காதலை அவனிடம் தெரிவிக்கிருள்.]

தர்ம : திஷ்யை-இங்கிருந்து நீ போகப் போகிருயா இல்லையா ?

திஷ்யை : வந்துவிட்டுப் போவதாக இருந்தால் - அங்கிருந்து ஏன் புறப்பட்டு வந்திருக்கப்போகிறேன் ?

தர்ம : என்ன வேண்டும் உனக்கு ?

திஷ்யை : நான் வேண்டுமென்று விரும்பி வந்தது - நீங்கள் கனிவு ததும்பக் கேட்கவேண்டியது. நான் ஆசை ததும்பச் சொல்ல வேண்டியது. நீங்கள் இப்படிக் கேட்டால் நான் எப்படிச் சொல்வது ?

தர்ம : புரிகிறது...

திஷ்யை : இன்ப ஏரியில் படகு ஒட்டி விளையாட வேண்டிய பருவ காலமல்லவா இது. சொல்லாமலேயே புரியும் - இல்லையா இளவரசே ?

தர்ம : புரிகிறது. ஆனல் நீ சொல்ல விரும்புவதை நான் கேட்க விரும்பவில்லை, நீ போகலாம்.

திஷ்யை : ஏன் ?

தர்ம : திஷ்யை.

திஷ்யை : அரசே !

தர்ம : நீ—?

திஷ்யை : உங்களை...

தர்ம : காதலிக்கிருயா ?

திஷ்யை : ஆமாம்.

தர்ம : அஹ் - ஹ- ஹா - திஷ்யை - உடைந்துபோன மண்கலத்தை நீ உபயோகப்படுத்த எண்ணுகிருய் - முடியுமா ? பட்டமரத்திலிருந்து கனியையும் - மொட்டைமரத்திலிருந்து நிழலையையும் எதிர்பார்க்கிருய்-கிடைக்குமா ?

திஷ்யை : யாரைச் சொல்லுகிறீர்கள் ?

தர்ம : என்னைத்தான் சொல்லுகிறேன்.

திஷ்யை : என்ன சொல்லுகிறீர்கள் ?

தர்ம : நீ எண்ணுவதும் நடக்காது. எதிர்பார்ப்பதும் கிடைக்காது என்று சொல்லுகிறேன்.

திஷ்யை : விவர்த்தனரே-என் அழகு உங்களுக்குப் பிடிக்கவில்லையென்பதனுல் என்னை வெறுக்கிறீர்களா ? இல்லை நான் உங்களைவிட அந்தஸ்த்தில் தாழ்ந்தவள் என்பதினுல் மறுக்கிறீர்களா ?

தர்ம : நீ எதற்காக என்னை விரும்புகிருய் ?

திஷ்யை : பெண்களை மயக்கும் உங்கள் அழகான கண்களுக்காகவும் - ஆண்களும் மயங்கும் உங்கள் சிறந்த ஆற்றலுக்காகவும்-நான் உங்களிடம் மயங்குகிறேன் அரசே.

தர்ம : திஷ்யை, நீயோ அழகி - ஆண்கள் மட்டுமல்ல-பெண்களே மயங்கக்கூடிய அளவுக்கு அழகுபடைத்த பேரழகி. இவ்வளவு அவ்வளவு என்று சொல்லமுடியாத அளவுக்கு எவ்வளவோ அழகுபடைத்த உன்னழகு-என் கண்ணழகைக் கண்டு மயங்குகிறதென்கிருய் நீ-ஆனுல் நானே இன்னெருவளின் அழகில் ஏற்கனவே மயங்கிவிட்டேனே !

திஷ்யை : இளவரசே—?

தர்ம : உண்மைதான் - ஏற்கனவே ஒருத்தியிடம் உள்ளத்தைப் பறிகொடுத்தவன் நான்.

திஷ்யை : என்ன ?

தர்ம : உன்னைவிட அவள் அழகிற் சிறந்தவளுமல்ல - என்னைவிட மதிப்பில் உயர்ந்தவளுமல்ல-ஆனுல்—?

திஷ்யை : என்ன அரசே !

தர்ம : அவள் என் காதலை மதிக்கவில்லை;.ஒதுக்கிவிட்டாள். ஏன் ஒதுக்கிவிட்டாள் ? இதைப்பற்றி என்ன எண்ணுகிருய் நீ ?

திஷ்யை : அவளுக்கு உங்கள்மீது விருப்பமிருந்திருக்காது என்று உணர்கிறேன்.

தர்ம : இதை நீ உணர்கிருய் அல்லவா ? என்னதான் அழகிருந்தாலும் - எவ்வளவுதான் ஆற்றலிருந்தாலும் - அவளுக்கு மனமில்லாததால் என்னையவள் விரும்பவில்லையல்லவா ? அழகும் ஆசையும் சேர்ந்திருக்கிறது உனக்கு. ஆனுல் அதை நிறைவேற்றி வைக்கும் மனமில்லையே எனக்கு-நான் அனுபவிக்கும் வேதனையை நீயும் அனுபவி-போய்வா.

காட்சி 5. அரண்மனை மாடியிலுள்ள **தர்மவிவர்த்தனின் தனியறை.**

[விரக்தியடைந்த உள்ளத்தோடு அறையினுள் நுழைந்த தர்ம விவர்த்தனன்-நான்கு நாட்களாக எங்கும் செல்லாது அறைக்குள்ளேயே அடைபட்டுக் கிடக்கிருன். அந்த அறைக்குள் பரபரப்போடு நுழைகிருள் இளவரசி சாருமதி.]

சாருமதி : அண்ணு.

தர்ம : என்ன சாருமதி-ஏன் இப்படி நடுங்குகிருய் ?—என்ன நடந்தது ?

சாருமதி : இன்னும் ஒன்றும் நடக்கவில்லை. இனித்தான் நடக்கப் போகிறது.

தர்ம : என்னது ?

சாருமதி : திருமணம்.

தர்ம : யாருக்கு...

சாருமதி : சக்கரவர்த்தி அசோகருக்கு-நம் தந்தைக்கு.

தர்ம : என்ன ?-சாரு-என்ன சொல்கிருய் நீ—?

சாருமதி : தனது மக்களுக்குத் திருமணம் செய்துவைத்து மகிழ வேண்டிய சக்கரவர்த்தி சாம்ராட் அசோகர், தானே திருமணம் செய்து மகிழப்போகிருரென்று சொல்கிறேன் - அண்ணு (விவர்த்தனின் தோளில் முகத்தைப் புதைத்துக்கொண்டு அழுகிருள் அவள்)

தர்ம : அடடா-ஏன் இதற்காக இப்படி அழுகிருய் ? சாரு-யாரைத் திருமணம் செய்துகொள்ளப் போகிருர் அரசர்.

சாருமதி : திஷ்யையை...

தர்ம : யார் ?-உனது தோழி திஷ்யை ரட்சதையையா ?

சாருமதி : ஆமாம்-அந்தச் சாகசக்காரியும் மகிழ்ச்சியோடு சம்மதித்துவிட்டாளாம்.

தர்ம : ஓ-கோ !

சாருமதி : ஏண்ணு-இந்தத் திருமணம் நடந்துதான் தீருமா ?

தர்ம : அரசர் நினைத்தால் அது நடக்காதா போய்விடும் ? சாரு-உலகிற்கே அறிவுரை வழங்கக்கூடிய அளவுக்கு உலக விவகாரம் தெரிந்த நம் தந்தைக்கு நாம் என்ன அறிவுரை வழங்க இருக்கிறது சொல்லு...

அடுத்த இதழில்:—

— சென்ற இதழ்த் தொடர்ச்சி —

ஒருவேளை குழந்தைக்கு ஏதேனும் ஆகிவிட்டதோ? என எண்ணியவாறு வாரிச் சுருட்டிக் கொண்டு போய் வாசலைத் திறந்தான் உமாபிரசாத்.

சிவப்புப் பட்டாடை அணிந்து கொண்டு தோளில் மந்திரச் சொற்கள் பொறித்தமேலாடையுமாக-கையில் ருத்திராட்ச மாலையுடன் காளிகிங்கரர் நின்று கொண்டிருந்தார். விடியற்காலையில், தந்தையின் இந்த பூஜைக் கோலத்தின் பொருள் அவனுக்குப் புரியவில்லை. கங்கையில் நீராடி வந்த பின்னரே புனித ஆடைகளை அவர் அணிவது வழக்கம் கண நேரத்தில் எண்ணற்ற கேள்விக் குறிகள் உமாபிரசாதின் மனதில் வளர்ந்தன.

வாசல் திறந்ததும், தந்தை அவனிடம்;

''தயாமயி எங்கே?'' என்ற கேள்வியைக் கேட்டார். முதலில் அதே படபடப்பு; உமாபிரசாத்- திரும்பிப் பார்த்தபோது தயாமயி எதுவும் புரியாதவளாக படுக்கையருகே நின்றுகொண்டிருந்தாள்.

காளிகிங்கரர்-தயாமயியைக் கண்டதும், பரபரப்புடன் அவள் அருகே போய்-அவள் காலடிகளில் விழுந்து வணங்கினார்,

வியப்பு மேலீட்டால்உமா பிரசாதிற்கு எதுவுமே தோன்றவில்லை. தயாமயி-பெரியவரின் இந்த விபரீதச் செயல் காரணமாக செயலற்று நின்று விட்டாள்.

வணங்கி எழுந்த காளிகிங்கரர் அவளைப் பார்த்து ''தாயே! என் வாழ்வு பயனுள்ளதாயிற்று. இன்றே நான் பேறு பெற்றவனானேன்...ஆனால் இது நாள் வரையில் நீங்கள் என்னிடம் மறைத்து வைத்திருந்தீர்களா ?''

''அப்பா...!'' உமாபிரசாத் உரக்கக் கூவிவிட்டான்.

''உமா! மகனே! தாயை வணங்கடா...''

''அப்பா, உங்களுக்கென்ன பைத்தியமா பிடித்துவிட்டது?''

''இல்லை மகனே இல்லை. எனக்குப் பிடிக்கவில்லை. பிடித்திருந்த பைத்தியம் இப்பொழுது தான் தெளிந்திருக்கிறது... ஆம் தாய் பராசக்தியின் அருளால் எனக்குக் கண் திறந்துவிட்டது......,''

உமா பிரசாதிற்கு எதுவுமே விளங்குவதாக இல்லை. ''அப்பா-நீங்கள் சொல்வது எதுவுமே எனக்குப் புரியவில்லை.''

''மகனே-நமக்குக் கிடைக்கக் கூடாத பேரருள் கிடைத்திருக்கிறதடா. எல்லாம் நாம் செய்த பூஜாபலன்தான். சிறுவயதிலிருந்தே நான் காளிமந்திரம் உருவிட்டுவந்த தின் பயனை அடைந்து விட்டேன். ஜகஜ்ஜனனியான அன்னை இங்கே-நமது வீட்டில் உனது மனைவியின் உருவில் அவதாரம் கொண்டிருக்கிறாள். நேற்றிரவு கனவில் தேவியே இந்த உண்மையை எனக்கு உணர்த்தினாள். என் வாழ்வு விமோசனமாயிற்று...'

தயாமயி-அன்னை பராசக்தியின் அவதாரம். நினைத்துக் கூடப் பார்க்க முடியாத விந்தையாகப் பட்டது அவனுக்கு. மூன்று நாட்கள் கடந்து விட்டன. இதற்கிடையே செய்தி எங்கும் பரவியது. பக்கத்துக் கிராமங்களிலிருந்தெல்லாம் மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து, காளிகிங்கரராயின் இல்லத்தில் தயாமயியின் உருவில் அவதாரங் கொண்ட பராசக்தியை தரிசனம்செய்து சென்றனர்.

சடங்குமுறை தவறாமல், தயாமயிக்குப் பூசைகள் நடந்தன. சங்கும்

தேவி

காளி பக்தர் ஒருவரின் கண்மூடித்தனமான நம்பிக்கையால் விளைந்த விபரீதத்தைச் சொல்லும் இச்சிறுகதை—பிரபல வங்காள ஆசிரியர் **பிரபாத் குமார் முகர்ஜி** எழுதியது. இதைத் தமிழில் தந்திருப்பவர் **ஆ. மாதவன்.**

மணியும் முழங்க-தீபமும்தூபமும் ஒளிர. எல்லாம் விதிப்படி நடந்தன. எண்ணற்ற ஆடுகளைப்பலியிட்டு அன்னைக்கு காணிக்கையாக்கினர்.

ஆனால் இந்த மூன்று நாட்களும் தயாமயி கண் மூடாது அழுது கொண்டுதான் இருந்தாள். உறக்கம் அவளை அணுகவேயில்லை. கொஞ்சங்கூட எதிர்பார்த்திராத இந்த அதிசய நிகழ்ச்சி அவள் இதயத்தை வாளால் அறுப்பதுபோலிருந்தது. அவள் அந்த வீட்டு மருமகள் என்பதும்-வீட்டில் பெரியவர்களுக்கெல்லாம் மரியாதை காட்ட வேண்டியவள், என்ற நிலையெல்லாம் மறைந்து போயிற்று. இன்று அவள் முகத்தில் நாணமில்லை. எதிர்ப்படுவோரையெல்லாம், பைத்தியக்காரியைப்போல வெறித்துப் பார்த்தாள். குரல் அடங்கிப் போயிற்று. கண்கள் கலங்கிச் சிவந்தன.

இரவு வெகு நேரமாகிவிட்டிருக்கும். பூசை அறையில் நெய் விளக்கு மங்கலாக எரிகிறது. கனத்த கம்பளியால் செய்த மெத்தையில் தயாமயி படுத்திருந்தாள். வாசல் கதவு லேசாக மூடப்பட்டிருந்தது. உமாபிரசாது ஒரு போர்வையை தலையில் மூடிக்கொண்டு, திருடனைப்போல மெல்ல மெல்ல, அறையினுள்ளே வந்தான். வாசலை தாளிட்டுக்கொண்டு, தயாமயின் படுக்கையில் வந்து அமர்ந்தான். காளிகிங்கரர் அந்தச் செய்தியை அறிந்தபின்பு-இன்றுதான் அவர்கள் இருவரும் தனியாக சந்திக்க முடிந்தது.

விழித்துக் கொண்டு படுத்திருந்த தயாமயி கணவனைக் கண்டதும் எழுந்துகொண்டாள்.

''தயா இதெல்லாம் என்னவென்று புரிகிறதா?'' மூன்று நாட்களுக்குப் பின்னர், ஆதரவான ஒரு வார்த்தை முதன் முதலாக அவள் காதில் விழுந்தது. இந்த மூன்று நாட்களும், பக்த ஜனங்களின், 'தாயே' 'பராசக்தி!' என்ற கூக்குரலைக் கேட்டு, அவள் இதயமே பாலைவனமாகப் போய்விட்டிருந்தது. தயாமயி கணவனின் மார்பில் முகம் புதைத்துக்கொண்டு விம்மினாள்.

உமாபிரசாதும் மனைவியை அணைத்துக் கொண்டு எதுவும் புரியாமல் கண்ணீர் வடித்தான்.

''தயாமயி, இதெல்லாம் உண்மையென்று உனக்குத் தோன்றுகிறதா? நீ என் தயா தானே? உன்னைப் பராசக்தி என்கிறார்களே?...''

''இல்லை...இல்லை...நான் உங்கள் மனைவி. நான் தேவியல்ல...நான் உங்கள் தயாமயி...நான் காளியல்ல,... நான் பராசக்தியல்ல...''

இதைக் கேட்டதும் உமாபிரசாது ஆதுரத்துடன் அவளை வாரியணைத்துக் கொண்டான். 'தயா! வா, வந்துவிடு; நாம் எங்காவது போய் விடுவோம். வெகு தூரத்திற்கு போய் விடுவோம். இந்தப் பைத்தியக்காரப் பிறவிகளின் கண்பார்வை படாமல் வெகு தூரம் போய் விடுவோம்...''

''போய்விடுவோம்... ஆனால் எப்படிப் போவது?''

''எல்லாம் நான் வழிவகுத்திருக்கிறேன். கொஞ்சம் பொறுத்துக் கொள்-''

''பொறுத்துக் கொள்கிறேன். எவ்வளவு நாள் பொறுத்துக் கொள்ள வேண்டும்? இந்தப் பைத்தியக்காரத்தனம் இப்படியே தொடர்ந்தால் என்னால் உயிர் வாழவே முடியாது...''

''கவலைப் படாதே தயாமயி. அடுத்த சனிக்கிழமை இரவு நான் உன்னிடம் வருவேன். அதுவரையில் பொறுத்துக் கொள். நாம் போய்விடுவோம்...''

சரியென்று உடன் பட்டாள் தயாமயி. அவன் மனைவியை கட்டியணைத்து முத்தமிட்டான். வேறு யாரேனும் பார்த்து விடுமுன், மனைவியிடம் விடை பெற்றுக் கொண்டு அவன் புறப்பட்டான்.

★

பொழுது விடிந்தது. தயாமயியின் முன் பூசை சடங்குகள் முடிந்தன. சிறிது நேரத்தில், கிராமத்தின் எழுபது வயது முதியவர் ஒருவர் தள்ளாடியவாறு அங்கே வந்தார். அவரது குழிவிழுந்த கண்களிலிருந்து கண்ணீர் பெருகிக்கொண்டிருந்தது. அவர் தயாமயியின் முன் நெடுஞ்சாண் கிடையாக விழுந்தார், ''தாயே! அகிலாண்டேஸ்வரி! நான் உன்னை நாளெல்லாம் வழிபடுகிறவனம்மா! இன்று நான் ஒரு விபத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறேன். என்னை நீதான் காப்பாற்றிக் கரை சேர்க்க வேண்டும் தாயே!''

தயாமயி அந்த முதியவரை வெறித்துப் பார்த்துக்கொண்டு பேசாமல் இருந்தாள்.

''பெரியவரே! உங்களுக்கு என்ன விபத்து நேர்ந்துவிட்டது?'' காளிகிங்கரர் கேட்டார்.

'ஐயா என் பேரன் நோய் வாய்ப்பட்டு சாகக் கிடக்கிறானய்யா. எங்கள் குலத்திற்கு ஒரே ஒரு பிள்ளை; அவனும் போய்விட்டால் வேறு நாதியில்லை எங்களுக்கு. அதனாலே தேவியிடம் உயிர்ப்பிச்சை கேட்க வந்திருக்கிறேன்'' முதியவர் அழுதுகொண்டே புலம்பினார்.

காளிகிங்கரர் சொன்னார்;

''ஐயா பெரியவரே எதற்குப் பயப்பட வேண்டும், எங்கள் பராசக்தி கருணையுடையவள். அவள் கட்டாயம் உமது பேரனுக்கு உயிர்ப்பிச்சை அளிப்பாள். நீர் போய் உமது பேரனை இங்கே கொண்டு வந்து தேவியின் காலடிகளிலே அர்ப்பணஞ் செய்யுங்கள், தேவி நன்மை செய்வாள்.

இதைக் கேட்டதும் மகிழ்ச்சியால் உடல் பதற முதியவர், பேரனைக் கொண்டு வர ஓடினார்.

சிறிது நேரத்தில் விதவையான முதியவரின் மகள். தனது பிள்ளையை தூக்கிக்கொண்டு வந்து தயாமயின் காலடிகளில் துணி விரித்து அதிலே படுக்க வைத்தாள்.

காளிகிங்கரர் நோய்வாய்ப்பட்ட அந்த குழந்தைக்கு தயாமயியின் கால்கழுவிய நீரை ஊட்டினார்.

அந்த விதவைத் தாய் தயாமயியின் தோழியாக இருந்தவள். அவளது வேதனை நிறைந்த முகத்தைப் பார்த்தபோது தயாமயியின் இதயம் சுட்டது-அவள் கண்களிலே நீர் துளிர்த்தது.

தயாமயியின் கண்களிலே நீர் நிறைந்ததைக் கண்டபோது குழுமியிருந்தோருக்கு ஆனந்தம் தலைதூக்கிற்று

''ஜய ஜய காளிமாதா! தாய்-பராசக்தி உளம்கனிந்துவிட்டாள்; தாயின் கண்களிலே கண்ணீரைப் பாருங்கள்!'' என்று எல்லோரும் கூக்குரலிட்டனர்

காளிகிங்கரர் காளிமந்திரங்களை உரத்த குரலில் பாடினார். நேரம் ஆக ஆகக் குழந்தையின் நிலை மாறிவந்தது, தாயின் முகத்தில் நம்பிக்கை படர்ந்தது. இனிப்பயப்பட வேண்டியதில்லை.

11-ம் பக்கம் பார்க்க



பிரச்னைகளுக்கு முடிவு காணமல் ஓயமாட்டோம்

20-2-61 அன்று திருச்சிக் கூட்டத்தில் 'செருப்பு மரியாதை' நடந்து முடிந்ததும், **கண்ணதாசன்** பேசிய பேச்சு.

தலைவர் அவர்கள் டால்மியாபுரப் போராட்டத்தில் நான் அடிபட்டதை உங்களிடத்தில் நினைவுபடுத்தினார்கள். இந்த உடம்பில் இன்னும் அடிபடுதற்கு தெம்பிருக்கிறதா என்று பார்ப்பதற்காக ஒருவர் மேடைக்கு ஓடிவந்ததை நீங்கள் பார்த்தீர்கள். எனக்காக வரவில்லை. சம்பத்திற்காகத்தான் வந்தவர் என்பதை என்னால் தெரிந்துகொள்ளமுடிந்தது. ஆனால், இதனால் இந்தக் கூட்டம் கலைந்துவிடவில்லை. மறுபடியும் இந்தக் கூட்டம் நடைபெறுகிறது. இதை அவர்மீது நான் ஒரு குற்றமாகச் சுமத்தவில்லை. அவரை இச் செயலுக்குத் தூண்டிய, இதற்குப் பின்னாலே இருக்கிற பின்னணியைத் தான் நான் மனதிற்குள்ளே கருதிக் கொண்டிருக்கிறேன். இந்தப் பின்னணியை நானும் அறிவேன். எதிர்காலம் அதற்கான பதிலைச் சொல்லக்கூடிய அளவில் காத்துக்கொண்டிருக்கிறது.

திருச்சியில்தான் எனக்கு இந்தத் தைரியமே உருவானது. டால்மியாபுரப் போராட்டத்திற்குப் பிறகுதான் எனக்குத் தெளிவும் உறுதியும் உண்டாயிற்று ஒன்றை நான் சொல்வதிலே தவறில்லை என்று கருதுகிறேன். கழகத்திற்கு வந்தபின், தனக்கு எதையும் சேர்த்துக்கொள்ளாத, விரும்பாத ஒரு கண்ணதாசன் இருக்கிறான் என்பதை எண்ணி நீங்கள் மகிழ்ச்சியடைய முடியும். கழகம் இன்று நேற்று அல்ல; 10 ஆண்டு .காலமாக செயல்படுகிறது. அதில், சம்பத் கொண்டிருக்கின்ற எண்ணம் நாளடைவில் வற்புறுத்தப் பட்டு வந்தது. அவர் எடுத்துக் கொண்ட நிலை உறுதிபடுத்தப்பட்டு அந்த எண்ணம் தி. மு. கழகத்தினரிடையே விவாதிக்க - முடிவினைத் தெரிந்துகொள்ள - வேண்டிய நேரம் இது. சம்பத் ஒரு தனி மனிதனல்ல; அவருடைய ஆசைக்கும், தத்துவங்களுக்கும் ஆயிரக் கணக்கான தோழர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிறார்கள் என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது. மதுரையிலும் இதே பின்னணி வேலை செய்தது. ஆனால், அந்த மேலமாசிவீதி சந்திக்காத சுமார் ஒரு இட்சம் மக்கள் அங்கே கூடியிருந்தார்கள்; மாணவர்களும்.

கழகத்தில் புதிய ஆர்வம், புதிய ரத்தம் ஓடுகிறது. இது விரைவில் நன்மை தரும் என்று தைரியம் அடையலாம். ஒரு காலிக் கூட்டம் மாறுபட்ட கருத்துடையவர்களை தாக்குவதில் இது இரண்டாவது முயற்சி. இப்பொழுது இது சம்பத்திற்கும் எனக்கும் ஏற்பட்டிருக்கிறது; இதை நான் இன்றும் எதிர்பார்க்கிறேன்; நாளையும் எதிர்பார்க்கிறேன்; இன்னும் யாராவது தாக்கப் படுவார்கள்.

திராவிடர்க் கழகத்திலிருந்து நாம் பிரிந்த நேரத்தில் அண்ணா அவர்கள் சம்பத்தைத் துணைக்கு அழைத்துக் கொண்டுதான் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற ஒரு உருவை அமைத்தார்கள். திராவிடர்க் கழகத்திலிருந்து பிரிந்த நேரத்தில் இதேபோல ஆத்திரம் கொண்டவர் திராவிடர்க் கழகத்தில் இருந்தார்கள். அப்பொழுது அண்ணா அவர்கள் தன்னிடம் யாராவது பெரியாரைப்பற்றிக் கேட்டால் பெரியாரைப்பற்றி நான் சொல்வதைவிட அவர் மகன் சம்பத்தையே கேளுங்கள் என்று சொல்வார். இப்படி கட்சியைவளர்த்தவர்சம்பத்என்பதை மறந்துவிடக்கூடாது. நான் உறுதியாகச் சொல்வேன், அரசியலுக்கு வந்த பிறகு, சொத்தை இழந்தவர்கள்,சொத்துச் சேர்த்தவர்கள் என்று பார்த்தால், சம்பத் தன்னுடைய சொத்தை அரசியலுக்கு வந்த பிற்பாடு இழந்தவர்; இவர் அரசியல் அறிந்தவர். இரண்டு கால்களையும் அரசியலில் ஊன்றிவிட்டவர். இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டம் முழுதும் நம்மைப்பற்றிக் கொஞ்சம் தெரிந்திருக்கிறது என்றால், அதற்குத் தோழர் சம்பத்துதான் காரணம் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது இதே நேரத்தில் தோழர் சம்பத்திற்கும், அண்ணாவிற்கும் விரோதம் என்று கதைகட்டி அதை பெரிதாக்கிக் கொண்டிருந்த நேரத்தில், நான்தான் அண்ணா, சம்பத் அறிக்கைக்கும் காரணமாக இருந்தவன்.

இதுவரையில் நீங்கள் பத்திரிகையில பார்த்தீர்கள். வேலூர் நிகழ்ச்சிக்குப் பிறகும், அண்ணாவின் அறிக்கைக்குப் பிறகும், சிற்றரசு பேசினார், மனோகரன் பேசினார், கருணாநிதி பேசினார். ஆனால், கண்ணதாசன் பேசினார் என்பதை ஒரு வார்த்தைகூட நீங்கள் பார்த்திருக்கமுடியாது. அந்தக் கண்ணியத்தை இரண்டு பெரும் தலைவர்களால் சிலர் கடைப்பிடிக்கிறார்கள் ஆனால், அண்ணாவின் பெயரைச் சொல்லி பிழைக்கிறார்கள் சிலர் என்பதை அண்ணா அவர்கள் மறந்துவிடக்கூடாது.

இப்படிப்பட்ட முறையில் நம்முடைய பெரிய சக்தியை வீணாக்கிவிட்டு எவ்வளவு காலத்திற்கு அரசியல் வாழ்க்கை நடத்தப் போகிறோம் என்பதுதான் என்னுடைய கேள்வி, அரசியலில் சுகத்தை அனுபவித்தவர்களை, சுகத்தை விட்டுவிட்டு வாருங்கள் என்று கூப்பிட்டால் கோபம் வரத்தான் செய்யும். அவர்களுக்கு சொந்தமாக ஒரு வீடு வாங்குவதற்கு கட்சி பயன்படுகிறது. எல்லோருக்கும் இந்த ஆசையை வளர்த்துவிட்ட பிறகு விடுதலையைப் பெறுவது எப்படி ? ஏதாவது காரியம் செய்ய வேண்டுமென்று யாராவது திட்டம் போட்டிருக்கிறார்களா ? இல்லை சுகமாக அரசியல் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இதை தோழர் சம்பத்கூடாது என்கிறார். அவர்களுக்குக்கோபம் வருகிறது. அண்ணாவை திரை மறைவாய் வைத்துக்கொண்டு சிலர் பிழைக்கிறார்கள். வேலூரில் இதெல்லாம் நடக்குமென்று யாருக்கும் தெரியாது. தீர்மானங்களை சில நாட்களுக்கு முன்னாலேயே நாங்கள் கொடுத்துவிட்டோம். விவாதத்தில் கலந்துகொள்ள மெம்பர்கள் மட்டும் சென்றோம். அங்கே நான் சென்றதும் கையில் தடியுடன் சிலர் எங்கே அந்தச் செட்டிப்பயல் எங்கே அந்த நாடார்ப்பயல் என்று சொல்லியதைக் கேட்டு நானே திடுக்கிட்டேன். அவர்கள் 10, 10 பேராகக் கூடிப் பேசியதையும் நான் பார்த்தேன். இதைப்பற்றி நாங்கள் கவலைப்படவில்லை செயற்குழு எங்கே நடைபெறுகிறது என்று நாங்கள் தேடவில்லை. உறுப்பினர்கள் அல்லாதவர்கள் ஏன் வந்திருக்கிறார்கள் என்பதையும் அப்பொழுது நாங்கள் சிந்திக்கவில்லை. இங்கு நடைபெற்ற நிகழ்ச்சியைக் கண்டு நீங்களெல்லாம் கவலைப்படுகிறீர்கள். அதைப் போல செயற் குழுவிலும் வன்முறைகளினால் தோழர் சம்பத் அவர்கள் பதவியை விட வேண்டியதாயிற்று. இதைக் கேட்டு நாங்கள் எல்லாம் திடுக்கிட்டோம். இந்த நிகழ்ச்சி சீர்பட வேண்டும் என்ற எண்ணத்தால் மேடையில் இதுவரை இதைப் பேசாமல் இருந்தோம். நேற்றுக்கூட இதுபற்றி ஒரு வார்த்தைகூட மதுரையில் பேசவில்லை. ஆனால், இன்று சொல்லும்படி செய்துவிட்டார்கள்.

எனக்கு வாழ்க்கையில் ஒன்றும் ஆசையில்லை.

3 வருடத்தில் 5 இலட்ச ரூபாய் எழுதியே சம்பாதித்து இருக்கிறேன். அதை அப்படியே செலவழித்து இருக்கிறேன். என் பையில் வைத்துக்கொண்டு யாருக்கும் நான் இல்லையென்று சொன்னதில்லை. அது ஒவ்வொரு தோழர்களுக்கும் தெரியும் நான் எனக்காக வாழவில்லை. இதை உணர்ந்து கொள்ள வேண்டும். நாம் கட்சிக்காக என்ன செய்தோம் என்பதை எண்ணிப் பாருங்கள். அதற்குப்பிறகுஇந்தமேடையில் குத்திக் கொன்றாலும் செத்துமடிய தயாராக இருக்கிறேன். நான் வாழ்க்கையில் மிகவும் கஷ்டப்பட்டவன். சென்னையில் சுப்பையா பார்பர் கடையில் இரண்டுநாள் வேலை செய்திருக்கிறேன். மெரினா கடற்கரையில் போலீசுக்குப் பயந்து கொண்டு குழிதோண்டி அதில் படுத்துத் தூங்கி இருக்கிறேன். கொள்கைக்காக நாமே தவிர நமக்காகக் கொள்கையல்ல. இந்த நிகழ்ச்சியையும், அதன் பின்னணியையும் நீங்கள் எண்ணிப்பாருங்கள்.

இதன் மூலம் பயந்து கட்சியை விட்டு நாங்கள் போய்விடுவோம் என்று எண்ணினால், நீங்கள் பைத்தியக்காரர்கள். உள்ளே இருந்துகொண்டு உங்களை கவனிப்போமே தவிர, வெளியே போய்விடுவதற்கு இது என்ன மாமியார் வீடா ? நான் பிறந்த வீடு; உங்களுக்கு எவ்வளவுபங்கு இருக்கிறதோ அவ்வளவு எங்களுக்கும் உண்டு ! இந்தப் பிரச்னைக்குஒரு முடிவுகாணமல் நாங்கள் ஓயமாட்டோம்; நீங்கள் நம்புங்கள். அறிஞர் அண்ணாவை நான் மிகவும் மதிப்பவன் ஆனால் இன்று சிலர் அண்ணாவுக்குப் பக்கத்தில் இருந்துகொண்டு அவருக்கு ஆழக்குழி தோண்டுகிறார்கள். இதிலேயிருந்து விடுதலை பெறவேண்டும் என்ற முயற்சி இன்றைக்கு தி மு. கழகத்தின் உள்ளே இருக்கிற முயற்சியாகும். இந்த முயற்சிக்கு வெற்றி தேடி வந்து கொண்டிருக்கிறது. இப்படி ஒரு முயற்சிக்கு செருப்பு வந்தால் தான் பிறகு மாலைவரும். பெரியாரின் வாழ்க்கையும் இப்படித்தான். விடுதலைஇயக்கத்தில்இருப்பவர் சுகம் கண்டு விட்டால் பிறகு போராட்ட எண்ணமே வராது. நாம் உலக நாடுகளின் விடுதலை வரலாற்றை அறிந்து, நாம் என்ன செய்யவேண்டும் என்பதைச் செய்ய வேண்டும். வாழ்க்கையை அருமையாகக் கண்டவன் நான். இதையெல்லாம் கண்டு பயந்து விடமாட்டேன். நான் மீண்டும் இங்கே பேசுவேன். கொல்லப் படாமல் இருந்தால் ! அப்படிக் கொல்லப்பட்டுவிட்டால் அந்தப் பிணத்தை வைத்துக் கொண்டு இந்தத் தத்துவங்களை கொண்டு செல்லுங்கள். அது எனக்குப் போதுமென்று சொல்லி விடைகோருகிறேன்.

அடுத்த இதழில்

18-2-61 அன்று சட்டக் கல்லூரி விடுதி விழாவிலும்; 19-2-61 அன்று மதுரைத் தியாகராயர் கல்லூரியிலும்; 20-2-61 அன்று மதுரைக் கூட்டுறவுக் கல்லூரியிலும்; 21-2-61 அன்று சென்னை சட்டக் கல்லூரித் தமிழ் விழாவிலும்; 22-2-61 அன்று சென்னை பச்சையப்பன் கல்லூரிக் கவியரங்கத்திலும் கண்ணதாசன் பேசிய பேச்சுக்களின் சாரமும், **"பாட்டொன்று கேட்டேன்"** புதிய தத்துவக் கட்டுரையும் இடம் பெறும்.

விரைவில் வெளிவருகிறது!

"கழகத்தில் நடப்பதென்ன ?"

குமாரபாளையம் பொதுக்குழுவிற்கு முன்னால் திரு. சம்பத் கொடுத்த அறிக்கையிலிந்து, 'எல்லாரும் இந்நாட்டு மன்னர்'-'அண்ணாவின் மன்னன்' கட்டுரைகளும் இதுவரைவெளிவராத, வேலூர் சம்பவங்கள், அதனைத் தொடர்ந்து வந்த தலைவர்களின் அறிக்கைகள், பல்வேறு சொற்பொழிவுக் குறிப்புகள், சம்பத்தின் உண்ணாநோன்பு வரை அத்தனையும் இடம்பெற்றுள்ள ஓர் வரலாற்றுத் தொகுப்பு,

கழகத்தின் அழுகற் புண்களை புரையோடு முன்பு ஆற்றவும், அமைதியை நிலைநாட்டவும் விரும்பிச் செய்த பெரு முயற்சியே இந்த நூல்.

தொகுப்பவர் : **அருப்பை கிழார்.**

வெளியீடு : **பைந்தமிழ்ப் பதிப்பகம்,**
சென்னை-6

ஏஜண்டுத் தோழர்களுக்கு அறிவிப்பு

தென்றல் முல்லை இதழ்களுக்கு பிப்ரவரி முடிய பில்பாக்கிகளை அனுப்பாதவர்களுக்குக் கண்டிப்பாய், பிரதிகள் அனுப்பப்பட மாட்டா.

நிர்வாகி.

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

குழந்தை பிழைத்துக் கொள்வான்-அந்திநேரத்திற்குமுன் குழந்தையை வீட்டிற்குக் கொண்டு போகலாம்...

தயாமயி காளிதேவியின் அவதாரம் என்று வார்த்தை பரந்த வேகத்தை விட, அவள் குழந்தையின் நோயைக் குணப்படுத்தினுள் என்ற செய்தி காட்டுத் தீபோல பரந்தது. மறுநாளே, மற்ஒருவு பாபாத்மா ஓடி வந்தான். தாயே கருணுநிதியே! என்மனைவி பிரசவ வேதனையால் துடிக்கிருளம்மா-உன் அருளிருந்தால் அவள்பெற்றுப் பிழைத்துவிடுவாள்!'' என்று வேண்டினுன். ''அதற்கென்ன? இதோ தேவியின் பாதாபிஷேகம் செய்த நீர்-இதைகொடு எல்லாம் நல்லனவாகும்!' என்று நீரைக் கொடுத்தார் காளிசிங்கரர்.

அந்தமனிதனும் அவர் சொன்னது போலவே செய்தான்-பொழுது சாய்வதற்குமுன்னர் அவன் மனைவி அழகிய ஒரு ஆண் குழந்தையை ஈன்றெடுத்தாள் என்ற செய்தி வந்தது!

★

இன்று சனிக்கிழமை. இன்றுதான் தயாமயி தன் கணவனுடன் புறப்படப் போகும் நாள். உமாபிரசாது வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் செய்துவிட்டான். போக வேண்டிய இடம் போனுல், வேலை கிடைப்பது வரையில் வாழ்க்கையை ஓட்டுவதற்கான முன் ஏற்பாடுகள் எல்லாவற்றையும் சரி செய்துகொண்டான். பகல் பொழுதை எப்படியோ தள்ளிவிட்டான்.

நடு இரவுப் பொழுது; எல்லோரும் உறங்கிவிட்டார்கள். ஆழ்ந்த அமைதியில் உமாபிரசாத் மெல்ல இருளில் நடந்து போய் தயாமயியின் அறையை அடைந்தான். தூங்கிக்கொண்டிருந்த மனைவியை மெல்ல முத்தமிட்டு எழுப்பினுன் உமா. அவள் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள்.

''தயா! நல்ல தூக்கந்தான் போ-புறப்படு நேரமாகிவிட்டது...!''

'எங்கே?'' தயாமயி வியப்போடு கேட்டாள்.

''நல்ல கேள்வி! கேள்வி கேட்கும் நேரமா இது. நமது திட்டத்தை மறந்துவிட்டாயா? உம் புறப்படு எழுந்து வாயேன்...'

தயாமயி ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியவள்போல அமர்ந்திருந்தாள்.

''என்ன யோசிக்கிருய் தயா! எல்லாம் போகும்போது யோசித்துக் கொள்வோம்...''உமா மனைவியின் கையைப்பிடித்து அவசரப்படுத்தினுன்.

தயாமயி அவன் பிடியை உதறி விட்டுச் சொன்னுள்; 'மனைவி எனும் முறையில், நீங்கள் இனிமேல் என்னை தீண்டக்கூடாது. நான், பராசக்தியல்லாமல், உங்கள் மனைவிமட்டும்தான் என்று என்னுல் தீர்மானமான ஒரு முடிவிற்கு வர முடியவில்லை.''

மனைவியின் இந்தக்கூற்றைக் கேட்டபோது, உமாபிரசாதிற்கு சிரிக்கத்தான் தோன்றியது. அவன் அவளை மீண்டும் முத்தமிட நெருங்கினுன்.

''வேண்டாம் இந்த அவசரக் கோலம். அதனுல் உங்களுக்கேதேனும் தீமைகூட நேரலாம்...''

மின்னல் கண்ணைப் பறித்து விட்டது போலிருந்தது. உமாபிரசாதிற்கு; தயா! உனக்கும் அந்தப்பைத்தியம் பிடித்துக் கொண்டதா?''

''இல்லை பைத்தியமில்லை. அப்படியென்ருல் அத்தனை பேருக்கும் நோய் குணமாயிற்றே ..இது பைத்தியக்காரச் செயலென்ருல் ஊரார் எல்லோருக்குமா பித்தம் தலைக்கேறிவிட்டது? இல்லை.' என்னுல் நம்பாமலிருக்க முடியவில்லை',

ஒருவகையில் அதுவும் சரியென்றுதான் அவளுக்குத் தோன்றியது.

''சரி நான் உங்கள் மனைவிதான். பராசக்தியாளுலும் மனிதப் பெண்ணுனுலும் நான் உங்கள் மனைவிதான்—''

இதை கேட்டபோது உமாபிரசாதிற்கு போன உயிர் திரும்பிவந்தது.

'அப்படியென்ருல் புறப்படு. நேரமாகி விட்டது.''

''நான் வரவில்லை-' தயாமயியின் குரலில் கண்டிப்பு கலந்திருந்தது—உமாபிரசாதிற்கு தாங்கமுடியாத நிராசையாகப் போய் விட்டது. அவன் மெல்ல இருளில் இறங்கி நடந்தான். அவன் போவதையே வெறித்துப் பார்த்துக் கொண்டு படுக்கையிலேயே அமர்ந்திருந்தாள் தயாமயி.

மறுநாள் உமா பிரசாதை எங்குமே காணவில்லை. தயாமயியின் கடவுள் தன்மையில் எல்லோருக்குமே ஆழ்ந்த நம்பிக்கை பிறந்திருந்தது. ஆனுல் கோக்காவின் தாய் அரசுந்தரிக்கு மட்டும் இதில் நம்பிக்கை பிறக்கவில்லை. அதனுலேயே, ஆரம்பநாட்களில் தயாமயியின் துயரத்திறகு அவள் ஆறுதல் சொல்லிவந்தாள். 'கிழவருக்கு வயது அதிகமாகி விட்டதல்லவா மூளைகலங்கிப்போய் விட்டது'' என்று அவள் ஆறுதல் கூறினுள்.

உமாபிரசாத் காணுமற் போய் இரண்டு வாரம் ஆகியிருந்தது. மூன்ருவது வாரத்தில் குழந்தை கோக்காவிற்கு நோய் கண்டது. நாள் செல்லச் செல்லக் குழந்தை மெலிந்து சோர்ந்து கொண்டே வந்தான். மருத்துவர்கள் யாருமே வரக்கூடாதென்று காளிகிங்கரராய் கண்டிப்பான உத்தரவு போட்டு விட்டார். அன்னை பராசக்தியே நம் இல்லத்தில் இருக்கையில் ஒரு மருத்துவன் இங்கே நுழைவதா? அவள் பாத நீரை குழந்தைக்கு ஊட்டுங்கள் எல்லாம் சரியாகிவிடும்-'' என்ருர்

''இந்தப் பாவிகள் என் குழந்தையை கொன்று விடுவார்கள். இந்த ராட்சசியால் என் செல்வத்தை குணமாக்க முடியாது. நீங்கள் மருத்துவனை அழைத்து வாருங்கள்-'' என்று தன் கணவனிடம் முறையிட்டாள், சுரசுந்தரி.

தாராபிரசாத் தந்தையின் நம்பிக்கைகளில் அசையாத பற்றுடையவன். அவன் மனைவியை சமாதானப் படுத்த முயன்ருன். ''பயப்படாதே. எல்லாம் நன்மைக்குத்தான் எதுவும் நேர்ந்துவிடாது.'' என்ருன்.

அரசுந்தரிக்கு எதுவும் சமாதானமாகத் தோன்றவில்லை. அவள் ரகசியமாக மருத்துவருக்குச் சொல்லியனுப்பி மருந்துகள் வாங்கிவந்ததையும் காளிகிங்கரர் கண்டு தடுத்து விட்டார். ''வீணுகத் தேவியின் கோபத்திற்கு ஆளாக வேண்டாம்.'' என்ருர். தயாமயிக்கும்-தன் சக்தியால் குழந்தை குணம் பெறுவான் என்ற நம்பிக்கை இருந்தது.

குழந்தையின் நோய் அதிகப்பட்டுக் கொண்டே வந்தது. ''குழந்தையை என்னிடம் கொண்டுவாருங்கள்'' என்ருள், தயாமயி. அவள் குழந்தையை தன் மடியில் வைத்துக் கொண்டே இரவும் பகலும் விழித்திருந்தாள். இரவிலே குழந்தைக்கு நோய் பின்னும் அதிகமாயிற்று. காளிகிங்கரர் மந்திரங்களை உரக்க ஓதினுர். தயாமயி கண்களை மூடிக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

விடியற்காலைப் பொழுதில் குழந்தை கோக்கா தயாமயியின் மடியிலேயே இறந்து கிடந்தது.

''அந்த அரக்கி என் குழந்தையைக் கொன்று விட்டாள்-'' எனக் கதறினுள் அரசுந்தரி,

''தாயே பராசக்தி குழந்தையின் உயிரை திருப்பிக் கொடுத்துவிடம்மா!'' எனக் கண்ணீர் உகுந்தாக் காளிகிங்கரராய்.

தயாமயி விக்சி விக்கியழுதாள். அவளுக்குத் தன் தெய்வீகத் தன்மையில் அவநம்பிக்கை பிறந்துவிட்டது. இல்லை, எல்லாமே பொய். குழந்தை இறந்து விட்டது மட்டும் உண்மையின் உருவாக அவளுக்குத் தோன்றியது.

அன்று பூசைச் சடங்குகள் நடைபெறவில்லை. தயாமயி தனிமையில் அழுதுகொண்டு அமர்ந்திருந்தாள்.

அந்தி கடந்தது, பூசை அறையில் இருள் நிறைந்து கிடந்தது.

விடியற்காலையில், காளிகிங்கரர் எழுந்து பூசை அறையைப் பார்த்த போது அவர் கண்ட காட்சி—தயாமயி -புடவைத் துணியை கயிருக்கிக் கொண்டு உத்தரத்தில் பிணமாகத் தொங்கிக் கொண்டிருந்தாள்!

★

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

லும் குறிப்பிடத்தக்க அளவு பயன் இல்லை என்று டில்லி மந்திரி ஒருவரே வெட்ட வெளிச்சமாக்கித் தெரிந்த பிறகும்கூட அரிசிப் பஞ்சத்தை நீக்குவதுதான் முதல் வேலை-அதுதான் முதலில் செய்வேன் என்று ஆணித்தரமாக எத்தனை முறை சொல்லி வருகிறீர்கள். அதைக் கேட்ட பிறகு உங்களுடைய துணிச்சலை எவ்வளவு பேர் பாராட்டுகிருர்கள் தெரியுமா? ஆகா! அதையெல்லாம் நீங்கள் எங்கே அறிந்திருக்கப் போகிறீர்கள்!

வடவர் ஏகாதிபத்தியம் இருக்கும்வரை தமிழனுக்கு வறுமையும் முட்டாள்தனமும் நீங்கப் போவதில்லை. முட்டாள்தனமும் வறுமையும் நீங்காதவரை வடவர் ஏகாதிபத்தியம் நீங்கப் போவதில்லை. காசுக்கு ஓட்டுப் போடுகிறவர் இருக்கும்வரை நீங்கள் தான் முதல் மந்திரி. நீங்கள் முதல் மந்திரியாய் இருக்கும்வரை மக்கள் காசுக்குத்தான் ஓட்டுப் போடுவார்கள். பெரியார் ஈ.வே.ரா கடைசி மூச்சு உள்ளவரை உங்கள் புகழை செவ்வழி பாடிக் கொண்டிருக்கப் போகிருர்-என்ன கவலை உங்களுக்கு?

இத்தனை வாய்ப்பும் வசதியும் பக்கத் துணையும் இருக்கும் போது நீங்கள் சொல்வதுதானே வேதம் - தெய்வவாக்கு! இத்தனை பாடு ஏன்? ''தமிழுக்கென்று இலக்கியமே கிடையாது'' என்று ஓங்கி அடியுங்களேன். எவன் என்ன செய்யமுடியும்-சொல்ல முடியும்? சொல்லித்தான் பார்க்கட்டுமே! பழங்காலக் கல்வெட்டுகள் எதிலாவது தமிழ்நாடு என்று செதுக்கப்பட்டிருக்கிறதா? இல்லை! அந்தக் கல்வெட்டுகளில் பழைய இலக்கியங்கள் பற்றி ஏதாவது குறிப்பு உண்டா? இல்லை. தொல்காப்பியத்தில் எங்காவது தமிழ்நாடு என்று தெளிவான குறிப்பு இருக்கிறதா? இல்லை! தமிழகம் என்று இருக்கலாம்! ஆனுல் அதன் பொருள் 'இனிய நெஞ்சம்-தமிழ் வீடு - இனிய வீடு - தமிழ் நெஞ்சம்' என்பதுபோல்தான் இருக்கமுடியும்! இத்தனை எதற்கு? என்னை எதிர்த்தவர்கள் விருதை சங்கரலிங்கம் கதிதான் அடைவார்கள் என்று அடித்துச் சொல்லிவிடுங்களேன்.

ஆனுல் ஒருவிதத்தில் நீங்கள் கூச்சப்படலாம். இந்தியா, இந்தி, இரயில், மோட்டார் இவற்றை இலக்கியத்தில் காண முடியுமா? உங்கள் அப்பன் பாட்டனெல்லாம் மந்திரியாக இருந்ததை இலக்கியத்தில் காட்டமுடியுமா? இப்படி முரட்டுத்தனமாக யாராவது கேட்டால் என்ன செய்வது என்று யோசிக்கலாம்.

ஆனுலும் நீங்கள் கவலைப்படவேண்டியதில்லை! திருவை விட்டுவிட்டு ஸ்ரீயை அடைமொழியாக ஏற்றுக்கொள்ளவில்லையா? வானெலியை விட்டுவிட்டு ஆகாஷ்வாணியைக் கட்டி அழவில்லையா? எத்தனையோ பன்மொழிப்புலவர்கள், எம். ஏ., பி. ஏ, பட்டதாரிகள் எல்லாரையும் கீழே திரிய விட்டு விட்டு, உங்களைப் போன்ற இயற்கை ஞானிகளை முதல் மந்திரியாக ஏற்றுக்கொண்டிருக்கவில்லையா? இப்படி நாமும் முரட்டுத்தனமாகப் பதில் சொல்லிவிடலாம். இவைகளைக் கொண்டு காளைமாடு அதிக ஓட்டு வாங்குவதைத் தடுக்கமுடியாது! நோட்டு வெளியேறினுல், ஓட்டு நிறைந்தேறி விடும்! ஆகவே கவலைப்பட வேண்டியதில்லை!

இறுதியாக ஒன்று சொல்கிறேன். ம. பொ. சி. போராட்டமாயிருந்தாலும் சரி. இந்தியா முழுதுமே போராடினுலும் சரி. தமிழ்நாடு என்ற பெயரை மட்டும் சூட்டிவிடவேண்டாம். சங்கரலிங்கனுர் பிணம்கிடந்த இடத்துப் புழுதிமண்கூட சிரிக்க ஆரம்பித்துவிடும். அந்தக் கேவலத்திற்கு மட்டும் ஆளாகவேண்டாம்.

இவர்கள் போராடியதால் உங்களுக்கு என்ன குறைச்சல்? பச்சைத்தமிழர் என்று பாராட்ட ஆளில்லையா? வரவேற்று மாலை சூட்ட ஆளில்லையா? வக்காலத்துப் போட்டுப் பேச ஆளில்லையா? எதில் குறை? எவருக்குப் பயப்பட வேண்டும்? தமிழ்நாடு ஒழிக!

ஆகாஷ் வாணி வாழ்க!

ஸ்ரீ வாழ்க!

சென்னை ராஜ்யம் வாழ்க!

காமராஜ் மந்திரி சபை நீடூழி வாழ்க!

இங்ஙனம் அன்பன்

அருப்பை கிழார்

வெண்பாப் போட்டி

பச்சைத் தமிழரின் பண்பு.

அச்சமின்றிப் பார்முழுதும் ஆண்டுப் புகழ்பெற்ற
மெச்சுந் திருவாழ்வின் மேன்மைபோய்-இச்சையுடன்
எச்சிலைக்கே ஓடும் இழிநிலைக்குள் ளானதந்தோ!
பச்சைத் தமிழரின் பண்பு!

—அமராவதியன், அரக்கோணம்.

தமிழ்நா டெனப்பெயர் சூட்டத் தயங்கும்
தமிழக நல்லமைச்சர், தாமும்-தமிழரென்றே
கொச்சைத் தமிழ்பேசிக் கூத்தடித் தல் என்னென்போம்
பச்சைத் தமிழரின் பண்பு!

—கோ. சோ. ஜெயபால், தெற்குப்பொய்கை நல்லூர்.

எந்நாட் டவரையும் ஏற்றுநம் தோழராய்
உன்னியே வாழ்வோம்; உரிமைகெடின்-ஒன்னலர்
துச்சமே! வெம்மைத் துயர்களைய ஆர்த்தெழல்
பச்சைத் தமிழரின் பண்பு.

—டி. கே. விசுவநாதன், சேலம்-5.

வஞ்சியர்க்கு நெஞ்சளித்து வஞ்சகர்தம் நெஞ்சழித்து
நெஞ்சினிக்கும் நற்றமிழில் நூல்யாத்து-மஞ்சுமழை
இச்சை மிகப்பெய்ய ஏர்பிடித்துப் பார்காத்தல்
பச்சைத் தமிழரின் பண்பு.

—மணவை. கா. மாரன், கொட்டாம்பட்டி.

பாகான பைந்தமிழ்ச்சொல் 'வானொலி'யை விடடொழித்(து)
'ஆகாஷ வாணி'யென்(று) ஆர்ப்பரிக்குங்-கூகைகளை
அச்சமின்றி வாழவைத்து வாய்மூடி ஆள்வதோ
பச்சைத் தமிழரின் பண்பு?

—பா. ஐ. முகமது அலி, செங்கற்பட்டு.

மதியிழந்து; தாய்நாட்டு மானம் அழித்துப்
பதவியைப் போற்றியே காக்கச்-சதிகாரர்
இச்சைக்கு கால்பிடித்(து) ஆளுவதே; ஈ. வே. ரா.
பச்சைத் தமிழரின் பண்பு.

—மு. வில்லவன், திண்டுக்கல்.

செந்தமிழ்த்தாய் நொந்தாள்! சிறப்பதனைத் தேய்த்திங்கே
நந்தமிழர் தாய்நலத்தை நாடாமல்-மந்திபோல்
இச்சைக் குகந்த எதையும் புரிவதோ
பச்சைத் தமிழரின் பண்பு?

—குமாரசுப்பிரமணியம், குருமலை.

தாய்ப்பெயரை அல்லவெனச் சாற்றுவதும் புன்மொழியை
வாய்ப்பறையால் ஓலமிட்டு வண்டமிழை-மாய்ப்பதற்கு
நச்சரவாய் மாறுவதும் நாட்டைக் கெடுப்பதுமோ
பச்சைத் தமிழரின் பண்பு?

—கி. இராசமாணிக்கம், எரகுடி.

ஈவார்; இரந்துண்ணார்; ஈதலியை யாக்கடைச்
சாவார்; சரணடையார்; காவலர்-பாவலரை
நச்சித் தமிழ்வளர்ப்பார்; நாடாளும் தன்மையுள்ள
பச்சைத் தமிழரின் பண்பு.

—சா. கா சாகுல் அமீது, சித்தையன் கோட்டை.

நாமாண்ட நாட்டை நமக்கில்லை என்றுரைக்கும்
கோமாளிக் கும்பல் குறைகண்டும்-ஊமைகளாய்
பிச்சை எடுக்கின்றார் பீடற்றோர்; ஆம்அதுவோ
"பச்சைத்" தமிழரின் பண்பு!

—மு. கருப்பையா, காரேந்தல்.

"கொச்சை பகரும் குதலை எனினுஉள்
அச்சமின்றி ஆண்மை அதையேற்பர்-இச்சையாய்
கச்சையும் கட்டிக் களம்போவ தன்றேதொல்
பச்சைத் தமிழரின் பண்பு."

—மரியவளன், செங்கை.

கண்ணிற் கருணை கரையுடைக்கும்; கைநெஞ்சம்
விண்ணிற் புகழ்பறக்க வெற்றிகொளும்; பண்ணிலே
இச்சைக் கினிய வகப்பொருள் கொட்டு நின்ற
பச்சைத் தமிழரின் பண்பு.

—சனுர்த்துநடராசர், கோவை-5.

கண்ணகியின் சொற்கேட்டுக் கண்முன் சிலம்புகண்டு
மண்ணிலன்றே மீன்கொடியோன் மாசுற்றேன் கண்ணகியே
இச்சணமே என்றுவி இல்லையென்று வீழ்ந்தானே
பச்சைத் தமிழரின் பண்பு.

—காரை கணேசன், காரைகுடி.

தில்லிக் கடிபணிந்து தென்னவரை ஏசுவதும்
இல்லாத பொய்யுரைகள் உண்டென்று-சொல்லுவதும்
இச்சைபல கூறி இடித்துத் தகர்ப்பதுமோ
பச்சைத் தமிழரின் பண்பு.

—இரா. சாமி, மதுரை மாவட்டம்.

மானம் உயிரென்னும் வண்டமிழர் அவ்வுயிரைத்
தானம் தருவார் தமிழுக்கே-ஏனென்றால்
அச்சந் தவிர்த்தறி வாண்ட அறி வெல்லாம்
பச்சைத் தமிழரின் பண்பு.

—இளங்கோவன், மாயூரம்.

ஆண்ட இனம்நாம் அடிமையல்ல வாழ்தலினும்,
மாண்டிடுதல் மேலென்பேன்; மானமுடன்-ஈண்டின்று
அச்சமின்றி வாழ அறப்போர் தொடுத்தலொன்றே
பச்சைத் தமிழரின் பண்பு.

—குமர நடராசன், மணக்கரை.

மொழியு மினமுந்தம் முன்னோர்கள் நாடும்
குழியில் புதைவது கண்டும், பதவிதனில்
இச்சை மிகக் கொண்டே ஏமாந் திருப்பதுவோ
பச்சைத் தமிழரின் பண்பு.

—குறள் பித்தன், எக்ஞூபுரம்.

நாட்டு விடுதலைக்கு நாம்கூறும் காரணத்தைக்
கேட்டு மறுப்புரைக்கக் கூடாமல்-வாட்டுகின்ற
கொச்சை மொழியால் கடிந்துநமைத் தூற்றலே
பச்சைத் தமிழரின் பண்பு.

—ப. அ. இசுமாயில் திருப்புத்தூர்.

அன்னைத் "தமிழ்நாடெ"ன் றன்பாய் அழைக்காமல்
"சென்னை" எனஇங்கே செப்புகிறார்!-தென்னவனே!
இச்சையுடன் போரிடுக! ஏற்றமிகு மானந்தான்
பச்சைத் தமிழரின் பண்பு.

—நெற்குப்பை, பனைபழநியப்பன், மேலைச்சிவபுரி.

தங்கத் தமிழால் தமிழ்நாட்டின் பேர்சொல்ல
இங்கே உரிமையிலை எம்மவர்க்கே!-இங்காளும்
கொச்சைத் தமிழ்பேசும் கோமானே! ஈதோசொல்
பச்சைத் தமிழரின் பண்பு?

—சி. புரட்சிவாணன் கிருங்காக்கோட்டை.

என்னிருந்தும் என்னபயன் என்னருமைத் தென்னவனே!
இந்நாட்டைச் செந்தமிழ்நா(டு) என்றழைக்கச்-சென்னையர(சு)
அச்சம் கொளலாமோ? ஆராய்ந்தால் ஏற்குமா
பச்சைத் தமிழரின் பண்பு?

—சா. நடராசன், சென்னை-12.

காலிகளைத் தேடிக் கதராடை மாட்டுவித்துக்
கூலி கொடுத்தவரைக் கூட்டத்தில் பேசவைத்து
மெச்சி வளர்க்கும் மிருகத் தனந்தானே?
பச்சைத் தமிழரின் பண்பு!

—கோ. கஸ்தூரி, சென்னை-7.

செஞ்சொற் றமிழ்ப்புலவர் சீரழிய, சீரில்லா
வஞ்சமொழி இந்திக்கு வாய்ப்பீந்தார்;-அஞ்சுகமே!
பச்சைப் பயிர்வாட பாறைக்கு நீர்தருமோ
பச்சைத் தமிழரின் பண்பு?

—புலவர் தென்றலரசன், பொள்ளாச்சி.

மானத்தைக் காப்பதுவும் மாத்தமிழைப் போற்றுவதும்
ஈனத்தை வீழ்த்துவதும் ஏற்றமுடன்-ஊனர்க்குப்
பிச்சை கொடுப்பதுவும் பேரறங்கள் செய்வதுவும்
பச்சைத் தமிழரின் பண்பு.

—சு. இராசேந்திரன், தேவகோட்டை.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: இராம. கிருட்டினன், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127 மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு,
தொலைபேசி எண் 83510.